Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – 12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆடி–07 | 22–07–2004 | வியாழக்கிழமை | ஓசை –155

கனேசா நகை மாளிகை
தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்
இல:123, பஜார் வீதி, வவுனியா. T.P.-024-2222464
இல:194, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.-021-2225987
(சி-9943)



# ஜூலை 25 ஐ துக்கதினமாக அனுஷ்டிக்க

# யாழ்.மாவட்டப் பொது மக்களின் ஒன்றியம் அழைப்பு

## அனைத்துச் செயற்பாடுகளும் நிறுத்தப்படும்

**எதிர்வரும் யூலை 25 ஆம் திகதியன்று முழு அளவிலான துக்க தினமாக அனுஷ்டிக்குமாறு யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது. அன்றைய தினம் அனைத்துச் செயற்பாடுகளும் நிறுத்தப்பட்டிருக்கும் எனவும் அறிவிக் கப்பட்டிருக் கிறது.**

கறுப்பு யூலை தினமான அன்று முழு அளவில் போக்குவரத்துச் சேவைகளை இடைநிறுத்தியும், வர்த்தகச் செயற்பாடுகளை முடக்கியும் தமது எதிர்ப்பினை வெளிப் படுத்த அனைத்து மக்களும் அணி திரளுமாறு பொது அமைப்புக்களின் ஒன்றியம் நேற்று மாலை விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளது.

இதேவேளை குடாநாட்டில் மக்களின் ஒட்டுமொத்த எதிர்ப்பை வெளிப்படுத்த ஏதுவாக அன்றைய தினம் உணவகங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் கூட்டுறவு அமைபுக்களும் மூடப்பட்டிருக்குமென யாழ் மாவட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றியப் பொதுச் செயலாளர் ப.கனகலிங்கம் தெரிவித்தார். (27,33)

## ஆலையடி வேம்பு பி.ச.தலைவர் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலி

ஆலையடி வேம்பு பிரதேசசபைத் தலைவரான கமலன் என அழைக் கப்படும் வேலாயுதம் ரவீந்திரன் (வயது 31) நேற்று 2.30 மணிக்கு இனந் தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில் அக்கரைப்பற்று பஸ் நிலையத்திற்கு அருகே இனந்தெரியாதோர் பிரதேச சபைத் தலைவரை சுட்டுள்ளதாக கிழக்குப்பிராந்தியத்திற்கும் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மாஅதிபர் தெரிவித்துள்ளார். அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்திலிருநது 250 மீற்றர் தூரத்தில் இச் சம்பவம் இடம்பெற் றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான விசாரணைகளை கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர். இவர் ஈ.பி.டி.பி குழுமுக்கிய உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

– உறுதிமொழியை நிறைவேற்றவில்லை –

## முதல்வர், ஊழியர்களை தடுத்துவைத்து வவுனியா வளாக மாணவர் போராட்டம்

(செட்டிகுளம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் வவுனியா மாணவர்கள் நேற்று வளாக முதல்வரையும், கல்விசாரா ஊழிய ரையும் வளாகத்தினுள் தடுத்து வைத்து பகிஷ்கரிப்புப் போராட் டத்தை நடத்தியுள்ளனர்.

கடந்த முறை தாம் பகிஷ்கரிப்பு நடத்தியவேளை உறுதியளிக்கப் பட்டபடி பூங்கா வீதியிலுள்ள கட்ட டத்தைத் தமக்கு வழங்கி நிர்வாகம் தனது உறுதிமொழிகளை நிறை வேற்றத் தவறிவிட்டதாகக் குற்றம் சாட்டியே இவ்வாறு போராட்டத் தில் ஈடுபட்டனர்.

மதியம் வளாக முதல்வரையும், கல்வி சாரா ஊழியர்களையும் வளாகத்தினுள் தடுத்து வைத்த தையடுத்து வெளியில் நின்ற ஊழியர்கள் வவுனியா பொலிசாரிடமும்,நீதிமன் றிலும் முறையிட்டனர். இதனை யடுத்து பொலிசார் வளாகத்திற்கு வந்து மாணவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்திய பின்னர் வளாக

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஊடகவியலாளர் போராட்டம்

கொஸ்கொட பொலிஸ் மன்னால் நேற்று சுயாதீன ஊடகவியாலாளா சங்கம் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற் கொண்டது. அண்மையில் விபத்து சம்பவம் ஒன்று தொடாபில் சிறி லங்கா காவல்துறையினருக்கு எதிராக பொதுமக்கள் மேற் கொண்ட போராட்டத்தின் போது, ஊடகவியலாளர் சிலர் காவல் துறை யினரால் தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே. இவ் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தை கட்டுப் படுத்தும் முகமாக காவல்துறையினர்காலி வீதி மற் றும் எல்பிட்டிய போன்ற பகுதிகளில் தடைகளை

(12ஆம் பக்கம் பார்க்க)

-யாழ்.இல் படையினரால் கைதாகி-

## காணாமல் போனோர் குறித்து ஆராய டென்மார்க் குழு யாழ்.வருகை

யாழ்.குடா நாட்டில் 1995,1996 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போனோர் தொடர்பான விடயங்களை ஆராய்வதற்காக டென்மார்க் நாட்டுக்குழு ஒன்று இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளன.

இவ்வாறு யாழ். வரும் இக்குழு யாழ். மாவட்டத்திலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள், நீதிபதிகள், படைத்தரப்பு அதிகாரிகள் காணாமல் போனோரின் குடும்ப அங்கத்தவர்கள் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.. இதன் போது காணாமல் போனோரைக் கண்டு பிடிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட சட்ட நடவடிக்கைகள், காணாமல் போனோரைக் கண்டுபிடித்தல் தொடர்பாக அரசு மற்றும் படைத தரப்பினர் காட்டிவரும் போக்குகள் என்பன குறித்து ஆராயப்படும்.(33)

## கண்காணிப்புக் குழுத்தலைவர் இன்று தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

(அலுவலகசெய்தியாளர்)

இலங்கை போர்நிறுத்தக் கண் காணிப்புக்குழுத் தலைவர் டொன் புறு கொவ்டே இன்று தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

நேற்று மாலை 3.00 மணியள வில் விசேட உலங்குவானூர்தி மூலம் கிளிநொச்சிக்கு வருகை தந்த கண்காணிப்புக்குழுத்தலைவர் இன்று காலை எட்டு மணியளவில் விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் அரசியல் துறைப் பொறுப்பாளர் தலைமையிலான குழுவினரைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

இப்பேச்சுக்களில் அண்மைக் காலங்களில் இடம் பெற்றுவரும் யுத்த நிறுத்த மீறல்கள் உள்ளிட்ட பல்வேறு முக்கிய விடயங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (கு)

## கும்பகோணம் தீவிபத்தில் உயிர் நீத்த சிறார்களின் செய்தி கேட்டு வேதனையடைகின்றோம்

### - சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை இரங்கல்

கடந்த வெள்ளிக்கிழமை கும்பகோணம் ஸ்ரீகிருஷ்ண மேல்நிலைப் பள்ளியில் உள்ள சரஸ்வதி முன்னிலைப பள்ளியில் ஏற்பட்ட கோரவிபத்தில் மானிட மனங்களை மரணிக்கச் செய்த, பள்ளிச் சிறார்கள் எரிந்து சாம்பலாகி அடையாளம் தெரியாத வகையில் உயிர்நீத்த செய்திகேட்டு ஆழ்ந்த வேதனையும், அதிர்ச்சியும் அடைகிறோம். இந்தக் கொடும் விபத்தில் சிக்கி உயிரிற்காகப் போராடும் பச்சிளம் குழந்தைகள் நலம்பெற வேண்டும் என்று எம் தாயாகிய தமிழ் அன்னையிடம் வேண்டி நிற்கிறோம்.

இவ்வாறு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை இந்தியத் தூதுவருக்கு அனுப்பிய செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது,

உலகமெங்கும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற எமது தாயக மாண வர்களின் குரலாக தமிழ்த் தேசியத் திற்காகவும் அடக்கு முறைகளிற்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்த் தேசிய ஒருமைப்பாட்டைச் சீர்குலைக்கும் தீய சக்திகளை எதிர்கொள்ளத் தயாராகவுள்ளோம்

### - அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்

தமிழ்த் தேசிய ஒருமைப்பாட்டை சீர்குலைக்கின்ற தீய சக்திகளை எதிர்கொள்ள தமிழீழ விடுதலைப்புலிகள் தயாராகவே உள்ளனர் என தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

மன்னார் ஆண்டான்குளம் பாடசாலையில் நேற்று நடைபெற்ற பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் அரச திணைக்கள அதிகாரிகளுடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

அமைதிச்சூழலைப் பயன்படுத்தி சில தீயசக்திகள் தமிழ்த் தேசியத்தைச் சீர்குலைக்க எண்ணியுள்ளன. இவற்றை எதிர்கொள்ள தமிழீழ விடுதலைப்புலிகளும தயாராகவே உள்ளனர்.

எமது தாயக விடுதலைப் போராட்டம் கடந்த காலங்களில் பல துயரமான பாதைகளைக் கடந்து இன்று ஒட்டுமொத்தத் தமிழ் மக்களும் ஒன்றிணைந்து நிற்கும் ஒரு சூழ்நிலையை எட்டி உள்ளது.

தற்போதைய அமைதிச்சூழல் விடுதலைப்புலிகளால் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் காரணமாகவே ஏற்பட்டது.

இதுவே தமிழ் மக்களுக்கு ஒரு தலைநிமிர்வையும் ஏற்படுத்திய தமிழீழ விடுதலைப் போராட்டம் நடைபெறாது விட்டிருந்தால் தமிழர்கள் தமது இன அடையாளத்தையே இழந்திருப்பர்.

சிங்களப் பேரினவாதம் கடந்த காலத்தில் தமிழினம் மீது பல்வேறு அடக்குமுறைகளைக் கையாண்டதுடன் பல போர் களையும் தொடுத்தது.

எம் இனத்தில் ஓர் இலட்சத்திற்கும் மேற்பட்ட உயிர்களை இந்த விடுதலைப் போராட்டத்தின் பொழுது அர்ப்பணித்துள்ளோம். தமிழினத்தை தலைநிமிர வைத்த இந்தவிடுதலைப் போராட்டத்தின் போது மன்னார் மாவட்டத் தைக் கைப்பற்றுவதற்காக எண்ணற்ற மாவீரர்கள் உயிர்த்தியாகம் செய்துள்ளார்கள்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**குயிலன்**
**புத்தகசாலை**
**ஆனந்தபுரம் கிளிநொச்சி.**

எமக்குரிய பிரயாணப்பை முக்கிய ஆவணங்களுடன் எமது கடைக்கும், 155ஆம் கட்டைக்குமிடையில் இரவு 7மணிக்கு தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் எமது கடையில் ஒப்படைக்குமாறு தயவுடன் கேட்கிறேன். (4706)


## கூட்டம்

(உடையார்கட்டு)

உடையார்கட்டு சுதந்திரபுரம் மாவீரர் படிப்பக நிர்வாகப் புனரமைப்பிற்கான கூட்டம் வரும் 24ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு சுதந்திரபுரம் சந்தி, பிள்ளையார் ஆலய முன்றலில் நடைபெறுமென உடையார்கட்டு கிராமப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார். (19)

# உள்ளூராட்சி மன்றங்களால் மக்களுக்கு செய்யமுடியாத சேவை எதுவுமில்லை

## – வடகிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தெரிவிப்பு

(திருகோணமலை)

உள்ளூராட்சி மன்றங்களினால் மக்களுக்குச் செய்யமுடியாத சேவை என்று ஒன்றுமே கிடையாது. சேவைகள் மக்களைச் சரியான முறையில் சென்றடைவதற்கு உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகம் பலப்படுத்தப்படவேண்டும் என்று வடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செல்வி. து.விஜயலட்சுமி உள்ளூராட்சி வாரத்தையொட்டி திருமலை நகரசபை ஒழுங்கு செய்த இரண்டு நாள் நூற் கண்காட்சியை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசும்போது தெரிவித்தார்.

பிரதம விருந்திரனராகக் கலந்துகொண்ட மாகாண ஆணையாளர் விஜயலட்சுமி "மக்களின் அடிப்படைத்தேவைகளை இனங்கண்டு பூர்த்திசெய்யக்கூடிய அமைப்பாக உள்ளூராட்சி அமைப்புக்கள் விளங்குகின்றன" என்று தெரிவித்தார். உள்ளூராட்சி வாரத்தை ஒட்டி நூற்கண்காட்சியை நகரசபை ஒழுங்குசெய்தது. எதிர்கால சந்ததியின் அறிவு விருத்திக்கு உதவுவதாக அமைகிறது என்றும் மாகாண ஆணையாளர் கூறினார்.

இந்நிகழ்வில் நூலகர் ந.செல்வஜோதி வரவேற்புரை நிகழ்த்தினார். நகரசபையின் விசேட ஆணையாளரும் பிரதேச செயலாளருமான சுந்தரம் அருமைநாயகம் தலைமையுரை நிகழ்த்தினார். நகரசபையின் செயலாளர் சி.விபுலானந்தன், பிரதம நூலகர் திருமதி நேசமலர் கிரீந்திரன், சனசமூக அதிகாரி திருமதி வசந்தி ஜெயராஜ், பிரதம லிகிதர் எஸ்.வி.கணேஷ் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (25)

# சிறுவர் விழிப்புணர்வு தொடர்பாக கரைச்சிப் பி.செயலகத்தில் கருத்தரங்கு

(அலுவலக செய்தியாளர்)

சிறுவர் விழிப்புணர்வு சம்பந்தமான கருத்தரங்கு ஒன்று கரைச்சிப் பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் காலை 10.00 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

மேற்படி கருத்தரங்கானது கிராம அலுவலர்களுக்கும், கிராமிய நிறுவனத் தலைவர், செயலாளர்களுக்கும் இடையில் பிரதேச செயலர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமான விழிப்புணர்வு தொடர்பான தலையகங்களில் பூநகரி கரைச்சி சிறுவர் மேம்பாட்டு நிறுவனங்களினால் நடாத்தப்பட்டது.

இதில் சிறுவர் தொடர்பான உரிமைகளை கிராமமட்டத்தில் பேணுவதற்கும், சிறுவர்களுக்கிடையிலான பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் மேற்படி நிறுவவனங்களில் தொடர்பு கொண்டு தீர்வு காணலாம் என்ற முடிவும் எடுக்கப்பட்டது. (கு)

# முல்லைத்தீவு மக்கள் வங்கியின் 43ஆவது வருடசேவை நிறைவுவிழா

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மக்கள் வங்கியின் 43ஆவது வருட சேவை நிறைவினை முன்னிட்டு நிகழ்வொன்று நாளை வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு முல்லைத்தீவு நாகர் பஸ்தரிப்பிடம் முன்பாகவுள்ள மக்கள் வங்கி நடமாடும் சேவைப்பகுதியில் நடைபெறவுள்ளது.

இதற்குப் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திருமதி. இமெல்டாசுகுமார் கலந்து கொள்வார்.

நிகழ்வில் 2003ஆம் ஆண்டில் ஜயசிறி சீட்டிழுப்பில் வெற்றி பெற்ற 7 வாடிக்கையாளர்களுக்கு பிரதம விருந்தினர் தங்க நாணயங்களைப் பரிசாக வழங்குவார்.

இவ்வங்கியின் 43ஆம் ஆண்டு நிறைவு நாள் கடந்த முதலாம் திகதி என்பது குறிப்பிடத்தக்கது. (20)



கிளிநொச்சி திருநகர் சுரபி முன்பள்ளி மாணவர்களின் திறனாய்வுப்போட்டி கடந்த திங்கள் மாலை முன்பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. (படம் வரன்)

# ஆரம்ப சுகாதார பணியாளருக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

ஆரம்ப சுகாதாரபணியாளருக்காக கனடியன் செஞ்சிலுவைச் சங்கத்தின் நிதியுதவியுடன் துவிச்சக்கர வண்டிகள்18 அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

இந்த துவிச்சக்கர வண்டிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்தின் கிளிநொச்சி மாவட்ட செஞ்சிலுவைச்சங்கத்தினரிடம் வழங்கப்பட்டுள்ளது. இதனை மாவட்ட செஞ்சிலுவைச் சங்கத்தினர் உரிய சுகாதார பணியாளருக்கு வழங்க உள்ளனர்.

அத்தோடு முல்லைத்தீவு செஞ்சிலுவைச் சங்கத்திற்கும் இவ்வாறு துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (கு)

# பன்முகப்பட்ட வரவு செலவுத் திட்டம்தொடர்பாக முல்லை மாவட்டத்தில் ஆய்வுக் கலந்துரையாடல்

முல்லை மாவட்டத்தின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு தொடர்பான ஆய்வுக் கலந்துரையாடல் முல்லை. மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா -சுகுமார் தலைமையில் கடந்த 13 ஆம் திகதி நடைபெற்றது.

இதில் முல்லை. மாவட்டத்தின் அதிமுக்கிய தேவைகள் ஓரளவேனும் தீர்க்கப் படுவதற்கான விபரம் எடுக்கப்பட்டது.

முல்லை. மாவட்டத்தில் மூன்று மாதிரி முன்பள்ளி அமைத்தல், பொதுநூலகம் 5, பாடசாலைக்கான நூலகம் 5 அமைத்தல், விளையாட்டு வீரர்களை மேம்படுத்துவதற்கான விளையாட்டு உபகரணம் கொள்வனவு.

அவசர மக்கள் பாவனைக்கான பாலம் அமைத்தல், சிறுவர் பூங்கா இரண்டு அமைத்தல்

முல்லைத்தீவு சுற்றுலாமையம் சிறுவர் விளையாட்டுத்திடல் அமைத்தல்.

பாடசாலைக்கான பாண்ட்வாத்தியம் இரண்டு வழங்கல்.

பெண்களுக்கான சுயதொழில் வேலைவாய்ப்புக்கான உதவி வழங்கல்.

கால்நடை கூட்டுறவு சங்கங்களை மேம்படுத்தலுக்கான உபகரணம் வழங்கல்.

முல்லை. மாவட்டத்தில் அவசர வீதிகளை துப்பரவு செய்தல் போன்ற வேலைத்திட்டம் செய்வதற்கான முடிவுகள் எடுக்கப்பட்டன

இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், உதவி அரச அதிபர்கள் துறைசார் வல்லுனர்கள் ஏனைய அரச திணைக்களத் தலைவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (20)

## - கிளிநொச்சி மாவட்டத்தில் -
# ஆசிரிய போட்டிப்பரீட்சை தமிழீழ நேரம் 9மணிக்கு ஆரம்பம்

ஆசிரிய போட்டிப்பரீட்சை வரும் 24.07.2004 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெறவுள்ளது. பரீட்சார்த்திகள் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதி அட்டையில் உள்ள பாடசாலைகளுக்கு காலை 09.00 மணிக்கு சமுகமாய் இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். இப்பரீட்சை இலங்கை அரச நேரப்படி 09.30 மணிக்கும், தமிழீழ நேரப்படி 09.00 மணிக்கும் ஆரம்பமாகும் என்பதை சகல பரீட்சார்த்திகளும் கவனத்தில் கொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

# கரைச்சிப் பிரதேச சபையினால் உள்ளூராட்சி வாரம் அனுஷ்டிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கரைச்சிப் பிரதேச சபையினால் உள்ளூராட்சி வாரம் கடந்த 19ஆம் திகதி தொடக்கம் அனுஷ்டிக்கப் பெற்று வருகிறது.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் இன்று அபிவிருத்திக் கருத்திட்ட நாள் என்ற தலைப்பில் வீதிச் சிரமதானம் இடம்பெற உள்ளது. இதில் ஊழியர்கள், சனசமூக நிலைய உறுப்பினர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொள்வார்கள். இதன் முக்கிய நோக்கம் அபிவிருத்தி பற்றியதாகும்.

நாளை நகர சேவை நாள் என்ற தலைப்பில் கருத்தரங்கு இடம்பெற உள்ளது. இதில் கழிவகற்றல், மீள் சுழற்சி, கூட்டெரு தாயாரித்தல் என்பன பற்றி ஆராயப்படவுள்ளது. இதில் கிராம உத்தியோகத்தர்கள், வர்த்தகர்கள், கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் ஆகியோர் பங்குபற்ற உள்ளனர். இதன் முக்கிய நோக்கம் நகரசேவையாகும்.

சனிக்கிழமை அன்று தகவல் தொழில்நுட்ப விஸ்தரிப்பு நாள் என்ற தலைப்பில் முதியோர்களுக்கான அடையாள அட்டை வழங்க நடவடிக்கை எடுத்தல் சம்பந்தமான கலந்துரையாடலில். அலுவலக ஊழியர்கள் பங்கேற்க உள்ளனர். இதன் முக்கிய நோக்கம் முதியோர்கள் சம்பந்தமானதாகும்.

இறுதி நாளாகிய 25ஆம் திகதி உள்ளூராட்சி வார இறுதிநாள் என்ற தலைப்பில் பரிசில்கள் வழங்கலும் கருத்துரைகளும் மதிய போசனமும் இடம்பெற உள்ளது. இதில் அலுவலக ஊழியர்கள் மற்றும் ஏனையோர் எனப் பலர் கலந்து கொள்வார்கள். இதனுடைய முக்கிய நோக்கம் நகர சேவையே ஆகும்.

எனவே மேற்குறிப்பிட்ட அடிப்படையில் நிகழ்வுகள் இடம்பெறும் என்றும் இதில் சம்பந்தப்பட்டவர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறும் கரைச்சிப் பிரதேச செயலாளர் பொன் நித்தியானந்தம் கேட்டுக் கொண்டுள்ளார். (கு)

## விரிவுரை மண்டபம் தேவை

வவுனியா விவசாயக்கல்லூரிக்கு கடந்த பத்து ஆண்டுகளாக விரிவுரை மண்டபம் ஒன்று தேவை என்று தொடர்ச்சியாக கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்ற போதிலும் இதுவரை தமது கோரிக்கை தொடர்பாக எவரும் கவனம் எடுப்பதாக தெரியவில்லை என்று அக்கல்லூரியின் அதிபர் தெரிவித்துள்ளார். இந்த விடயத்தில் சம்பந்தப்பட்டோர் கவனம் செலுத்தினால் மாணவர்கள் பயனடைவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.(21)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

உதயம் 04 . 03 . 1920



அஸ்தமனம் 24 . 06 . 2004

## திருமதி அன்னப்பிள்ளை மயில்வாகனம்

அன்பும்,பண்பும், பொறுமையும், பாசமுடைய தாயே!
உங்கள் ஆத்மா சாந்தியுறப் பிரார்த்திக்கின்றோம்.

எமது தாயாரின் மரணச் செய்தி அறிந்து ஓடோடிவந்து ஆறுதல் கூறியோருக்கும், இறுதிச்சடங்கில் பங்கு பற்றியோருக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் , உணவும் குளிர்பானமும் வழங்கி உபசரித்தோருக்கும் மற்றும் நானாவித உதவிபுரிந்த அனைவருக்கும், எமது மனமார்ந்த நன்றி உரித்தாகுக! எமது அன்புத் தாயாரின் அந்தியேட்டிக்கிரியைகள் வரும் சனிக்கிழமை (24.07.2004) எமதில்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் கலந்து அம்மாவின் ஆத்மாசாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் தொடர்ந்து நிகழும் மதிபோசனத்தில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

"ராஜ மகால்"
P.W.D. அலுவலக வீதி.
முல்லைத்தீவு. (சி.9159)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்
தகவல் சு.இராசையா J.P

# சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்பை பின்பற்ற இஸ்ரேலுக்கு நிர்ப்பந்தம்

-ஐ.நா.வில் தீர்மானம் நிறைவேறியது

**பலஸ்தீனத்தின் மேற்குக் கரைப்பகுதியில் இஸ்ரேல் அமைத்துவரும் தடுப்புச்சுவரை தகர்க்கவேண்டும் என்ற சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்பை இஸ்ரேல் ஏற்று அதனை செயற்படுத்தவேண்டும் என்று ஐ.நா.சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.**

191 பேர்கொண்ட ஐ.நா பொதுச் சபையில் இஸ்ரேலின் தடுப்புச் சுவர் தொடர்பாக நேற்று முன் தினம் கொண்டுவரப்பட்ட "இஸ்ரேல் சுவரை அகற்ற வேண்டும்" எனும் தீர்மானத்தை 149 நாடுகள் ஆதரித்து வாக்களித்தன.


அமெரிக்கா உள்ளிட்ட 6 நாடுகள் மட்டுமே எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. மேலும் ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் 25 நாடுகளும் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்துள்ளன.

சர்வதேச நீதிமன்றம் வகுத்தளித்த திட்டத்தின்படி இஸ்ரேலும், பலஸ்தீனமும் உடனடியாக தமது கடமைகளை நிறைவேற்ற வேண்டும் என்றும் ஐ.நா தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

ஆனால ஐ.நா சபையின் தீர்மானத்தை ஏற்க இஸ்ரேல் மறுத்துள்ளது. இந்த சுவர்கட்டும் பணி தொடரும் என்றும் நாட்டின் பாதுகாப்பு உரிமையில் இஸ்ரேல் சமரசம் செய்து கொள்ளாது என்றும் பிரதமர் ஏரியல் ஷெரோனின் மூத்த ஆலோசகர் ஜெருசலேமில் நேற்றுக் கூறியுள்ளார்.



உக்ரேனில் நடைபெற்ற நிலக்கரி சுரங்க விபத்தில் தேடுதல் நடத்தி விட்டுத் திரும்பும் மீட்புப்பணியாளர்கள்.



லெபனானிய கிளர்ச்சிவாதிகளின் தாக்குதலுக்குள்ளான இடமான இஸ்ரேலிய ஜோர்தான் எல்லையில் இராணுவ வாகனமருகில் காவல் இருக்கும் இஸ்ரேலிய இராணுவத்தினர் (இந்தத் தாக்குதலில் இரு இஸ்ரேலிய இராணுவத்தினரும் லெபனானியரும் பலியாகியமை குறிப்பிடத்தக்கது.)

# இந்தியா-பாகிஸ்தான் நாடுகளிடையில் செப்-5இல் வெளியுறவு மட்டப் பேச்சுக்கள்

-துணைத் தூதரகங்கள் அமைக்கவும் முடிவு

(இஸ்லாமபாத்)

இந்தியாவும் பாகிஸ்தானும் எதிர்வரும் செப்டெம்பர் 5 ஆம் 6ஆம் திகதிகளில் வெளியுறவு மட்டப் பேச்சுக்களை நடத்துவதென்று தீர்மானித்துள்ளன.

இஸ்லாமபாத் பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் குறித்த முக்கிய அறிவிப்புக்கள் அறிவிக்கப்படும் என்றும் மும்பையிலும் கராச்சிலும் துணைத் தூதரகங்களும் திறப்பது என்றும் நேற்று இஸ்லாமபாத்தில் இருநாட்டு வெளியுறவு அமைச்சர்களும் செய்தியாளர்களிடம் கூறியுள்ளனர்.

அத்துடன் செப்ரெம்பர் 5 ஆம் 6 ஆம் திகதிகளில் புதுடில்லியில் இரு அமைச்சர்களும் சந்தித்து பேச்சு நடத்தவும் தீர்மானித்துள்ளதாகவும் கூறியுள்ளனர்.

காஷ்மீர் உள்ளிட்ட இரு தரப்புப் பிரச்சனைகள் குறித்துப் பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் மௌமூத் கயூரியுடன் இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங் நேற்று இஸ்லாமபாத்தில் பேச்சுநடத்தியுள்ளனர்.

இதன்பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மௌமூத் கயூரின், பேச்சுவார்த்தை நட்புடனும் வெளிப்படையாகவும் அமைந்திருப்பதாகக் கூறினார்.

இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங் பேட்டியளிக்கையில், பாகிஸ்தானின் எல்லை தாண்டிய பயங்கரவாதம் ஊடுருவல் போன்ற விடயங்கள் விவாதிக்கப்பட்டதாகவும் கூறியுள்ளார்.

### ஒப்பந்தம்

விண்வெளி ஆய்வில் ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்கான ஒப்பந்தமொன்றில் இந்தியாவும்-ரஷ்யாவும் கையெழுத்திட்டுள்ளன. இந்திய ரொக்கட்டுக்களின் உதவியுடன் ரஷ்ய விண்கலங்களைச் செலுத்துவதும் இவ் ஒப்பந்தத்தில் அடங்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# ஜேர்மனியில் புயலுடன் மழை இயல்பு வாழ்க்கை பாதிப்பு

ஜேர்மனியில் இதுவரை காலத்தையும் போலன்றி கடந்த திங்கட்கிழமை கடும்புயலுடன் மழை பெய்துள்ளதால் ஏராளமான மக்கள் வீடுகளை இழந்துள்ளனர்.புயல் மழை காரணமாக அந்நாட்டில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

ஜேர்மனியின் மேற்குப் பகுதி நகரங்களே பெரிதும் புயல், மழையினால் பாதிக்கப்பட்டுள்ளது. மின்சாரக் கம்பங்கள் வீதியில் விழுந்ததில் போக்குவரத்துத் துண்டிக்கப்பட்டது. மின்கசிவால் இரண்டு வீடுகள எரிந்துள்ளன. அத்துடன் வீதிகளின் அருகிலுள்ள மரங்கள் பயணம் செய்த வாகனங்கள் மீதும் விழுந்துள்ளன.

# தாய்வான் போர் ஒத்திகை யுத்த அபாயம் அதிகரிப்பு!

(தைப்பி)

தாய்வான் நேற்று போர் ஒத்திகையை நடத்தியுள்ளது. தாய்வானின் நீண்ட வீதிகளில் நேற்று திடீரென்று போர் ஒத்திகைக்காக இரண்டு போர் விமானங்கள் தரையிறங்கியுள்ளன.

தாய்வான் மீது சீனா போர் தொடுக்கும் அபாயம் இருப்பதினால் அதை எதிர்கொள்ள தாய்வான் முன் ஆயத்தமாக நேற்று போர் ஒத்திகை நடத்தியுள்ளது.

கடந்த வாரம் சீனா தாய்வானின் ஹொங்கொங் நகரில் போர் ஒத்திகை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தாய்வான் சனாதிபதி செஷ சுயிங் சியாங் அடுத்த நான்கு ஆண்டுகளில் புதிய அரசியல் சாசனத்தை ஏற்படுத்தப்போவதாக அறிவித்திருப்பதால் சீனா தாய்வான் மீது போர் தொடுக்கும் அபாயம் ஏற்பட்டிருப்பதாக கூறப்படுகின்றது.

# தெற்காசிய நாடுகளின் பிரச்சினைகளில் "சார்க்" அக்கறை செலுத்துவது அவசியம்

-பாகிஸ்தான் சனாதிபதி வலியுறுத்து

(இஸ்லாமபாத்)

தெற்காசிய நாடுகளுக்கிடையே உள்ள பிரச்சினைகளை அமைதியான முறையில் தீர்ப்பதற்குத் தெற்காசிய ஒத்துழைப்பு நாடுகளின் அமைப்பான சார்க் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று பாகிஸ்தான் சனாதிபதி பர்வேஷ் முஷாரப் கேட்டுக்கொண்டுள்ளார்.

இஸ்லாமாபாத்தில் சார்க் வெளியுறவு அமைச்சர்களின் மாநாடு நடைபெறுவதையொட்டி நேற்று முன்தினம் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனை வலியுறுத்தியுள்ளார்.

அமைதி மற்றும் பாதுகாப்பு விடயங்களில் உறுப்பு நாடுகளுக்கிடையில் நம்பிக்கையை ஏற்படுத்துவது அவசியம் என்றும் முஷராப் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சார்க் வெளியுறவு மட்ட மாநாட்டில் பங்கு பற்றுவதற்காக இஸ்லாமாபாத்திற்கு வந்திருக்கும் சார்க் நாடுகளின் வெளியுறவு செயலர்கள் பர்வேஷ் முஷாரப்புடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். இதன் போது பேசிய பர்வேஷ் முஷாரப் பிரச்சினைகள் வரும் முன்பே அவற்றைத் தவிர்க்க சார்க் நாடுகள் முக்கியத்துவம் தரவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

### இன்னிசை எழுப்பும் பூந்தொட்டிகள்

(டோக்கியோ)

இன்னிசை எழுப்பும் வினோத பூந்தொட்டிகள், ஜப்பான் நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இசைத்தட்டுகள் பூந்தொட்டிகளுடன் இணைக்கப்பட்டுள்ளதால் பூந்தொட்டிக்குள் இருக்கும் இலைகள், பூக்கள் பாடுவது போன்றும், இசைப்பது போன்றும் காட்சியளிக்கின்றன.

### புதுச்சேரியில் விமான நிலையம்

(சென்னை)

புதுச்சேரியில் கடலோர காவல் படை விமான நிலையம் 2007 இற்குள் அமைக்கப்படும் என்று கடலோர காவல் படையின் கிழக்குப் பகுதி தலைவர் யூ.என். துதிவா கூறியுள்ளார். சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதே போன்ற விமான நிலையங்கள் கிழக்கு கடலோர பகுதியான கார்க்கி நாடாவிலும், கோபால் பூரிலும் அமைக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.



மியாமியிலுள்ள மிருகக்காட்சிச்சாலையில் காணப்படும் ஓராங்குட்டான் இன இரட்டைப் பிறவிக்குரங்குகள் (20 வருடங்களின் பின் இரட்டைப்பிறப்பு நிகழ்ந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.)

# ஜப்பானியப் படைகளை அகற்ற ஈராக் தீவிரவாதிகள் முயற்சி

(பாக்தாத்)

ஈராக்கிலிருந்து யப்பான் படைகளை திரும்பப் பெறாவிட்டால் அந்நாட்டுப் படைகள் மீது கார்க்குண்டுத் தாக்குதல் நடத்தப்படும் என்று தீவிரவாதக் குழுவொன்று எச்சரிக்கை விடுத்துள்ளது.

கர்சாகி தலைமையிலான தீவிரவாதப்பிரிவு இணையத்தளத்திலே இந்த மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. பிலிப்பைன்ஸ் அரசின் வழியில் யப்பானும் ஈராக்கிலிருந்து படைகளை வாபஸ் பெற வேண்டுமென்று தெரிவித்தே இத்தகைய மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.



பாஸ்ராவில் சோதனைச் சாவடியில் காவல் இருக்கும் பிரிட்டன் இராணுவ வீரர் (அண்மையில் இவரது சகா இருவரும் உயரதிகாரி ஒருவரும் இனந் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது)

# வவு.இல் அதியுயர் பாதுகாப்பு வலயத்தால் மீள்குடியமர முடியாது மக்கள் அவதி

**அதியுயர் பாதுகாப்பு வலயம் காரணமாக வவுனியா மாவட்டத்தை சேர்ந்த 143 குடும்பங்களைச் சேர்ந்த 525 பேர் மீளக்குடியமர முடியாமல் இருப்பதாக வவுனியா அரச செயலக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.**

வவுனியா மாவட்டத்தில் உள்ள நலன்புரி நிலையங்களில் தற்போது 2,452 குடும்பங்களைச் சேர்ந்த 9,605 பேர் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களில் சொந்த இடங்களுக்குச் செல்லவுள்ள 75 குடும்பங்களைச் சேர்ந்த 330 பேரும், காணி இல்லாத வெளி மாவட்டங்களை சேர்ந்த 1,921 குடும்பங்களை சேர்ந்த 7,465 பேரும், காணியிருந்தும் வவுனியா மாவட்டங்களில் வாழ விரும்புவபவர்கள் 158 குடும்பங்களை சேர்ந்த 600 பேரும், காணியில்லாத சொந்த மாவட்டத்தில் மீளக் குடியமர வுள்ள 155 குடும்பங்களை சேர்ந்த 685 பேரும் நலன்புரி நிலையங்களில் வாழ்ந்துவருவதாக வவுனியா அரச செயலகம் மேலும் தெரிவிக்கின்றது.

## புனரமைக்க முன்வருக!

(முள்ளியவளை)

முள்ளியவளை கமநல அபிவிருத்தி சேவை நிலயம் நீண்ட பல காலமாக எதுவித திருத்த வேலைகளும் செய்யப்படாத நிலையில், கூரை பழுதடைந்த நிலையில் உள்ளது.

மேற்படி நிலைய கூரைஓடுகள் உடைந்து கழன்று வீழ்ந்தும் உள்ளதால் மழை நேரங்களில் மழை நீர் நிலையத்தினுள் ஓடுகின்ற நிலையும், தரை உடைவுகள் ஏற்பட்டு குழியாகவும் காணப்படுகின்றது. மேற்படி நிலையத்திருத்த வேலைகளை மேற்கொள்ள எது வித நடவடிக்கைகளையும் இதுவரை எடுத்ததாகத் தெரியவில்லை. (ஆ)

# கண்ணிவெடி விழிப்புணர்வு பயிற்சிப் பட்டறை

(அலுவலக செய்தியாளர்)

வடக்கு- கிழக்கு நீர்ப்பாசன விவசாயத்திட்டத்தின் கிளிநொச்சி மாவட்ட காரியாலயததினரின் ஒழுங்கமைப்பில் கண்ணிவெடி அபாயக் கல்வி எனும் தலைப்பில் கண்ணிவெடி விழிப்புணர்வுப் பயிற்சிப் பட்டறை நடாத்தப்பட்டது.

வன்னி மாவட்டங்களில் நிர்மாணப் பணிகளை மேற்கொண்டு வரும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், வேலை மேற்பார்வையாளர்கள், கனரக வாகன சாரதிகள் ஆகியோரை ஒருங்கிணைத்து "யுனிசெப்" நிறுவனத்தின் அனுசரணையுடன் நியாப் திட்டத்தின் சுற்றுலா விடுதியில் காலை 9.30 மணிக்கு இப்பயிற்சிப்பட்டறை ஆரம்பமானது.

இதில் வெடிபொருட்கள் பற்றிய ஆய்வும்,வெடிபொருட்கள் காணப்படக்கூடிய இடங்களை இனங்காணல், வெடிபொருட்கள் பற்றிய எச்சரிக்கைக் குறியீடுகளை! அறிதல், வெடிபொருட்களால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்தல், அவசர நிலைமைகளில் எவ்வாறு நடந்துகொள்ளுதல் போன்ற விடயங்கள் தொடர்பாக விளக்கக் கருத்துக்கள் வழங்கப்பட்டன. (ச)

# கோட்ட தேசிய எழுச்சி பேரவை சந்திப்பு

(ஒட்டுசுட்டான்)

கோட்டமட்டத்திலான தேசிய எழுச்சிப் பேரவையினரின் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

கடந்த சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் ஒட்டுசுட்டான் கோட்ட மட்டத்திலான தேசிய எழுச்சிப் பேரவை சந்திப்பு ஒட்டுசுட்டான் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுநிறுவன இணைப்பாளர் தலைமையில் நடைபெற்றது.

இதில் தேசியஎழுச்சிப்பேரவையின் செயல்திறன் பற்றியும் எதிர்கால நடவடிக்கை பற்றியும் பாராளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரத்தினம் தெளிவு படுத்தினார். சமகால அரசியல் நிலவரங்களை முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் வழங்கினார்.இதில் ஊரக கோட்டமட்ட தேசிய எழுச்சிப்பேரவையின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (05)

# மீளக் குடியமர்வோருக்கான உதவிகள் குறித்து ஒப்பந்தம்

மீளக்குடியமர்வோருக்கான உதவிகளை வழங்குவது தொடர்பான ஒப்பந்தம் ஒன்று கடந்த திங்கட்கிழமை செய்து கொள்ளப்பட்டுள்ளது.23.2 மில்லியன் ரூபா பெறுமதியான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

சேவாலங்கா நிதியத்திற்கும் அகதிகள் புனர்வாழ்வு மீள்குடியேற்றத்துறை அமைச்சிற்கும் இடையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.411 குடும்பங்களை மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்த உதவித் தொகை பயன்படுத்தப்படும் என தெரிவிக்கப்படுகின்றது. (32)

# வீதி ஒழுங்குகளை மீறி வாகனம் ஓட்டுவோர் மீது தமிழீழ காவல் துறையினர் நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

வீதியொழுங்குகளை மீறி வாகனம் ஓட்டுவோர் மீது தமிழீழ காவல் துறையினர் வீதிப் போக்குவரத்துப் பிரிவினர் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

கடந்த திங்கட்கிழமை யாழ். கண்டி பிரதான சாலையில் மதுபோதையில் வாகனம் செலுத்தியவர் கள் சமாந்தரமாக, துவிச்சக்கர வண்டிகளில் பயணித்தவர்கள் ஆகியோரைக் கைதுசெய்து நீதிமன்றில் முற்படுத்தினர். இவர்களுக்கு குற்றப்பணம் செலுத்துமாறு தீர்ப்பு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் மோட்டார் சைக்கிளில் மூவர் பயணிப்பது தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் மீறிப்பயணிப்போர்மீது கடும்நடவடிக்கை எடுக்கப் படுமெனவும் தமிழீழ காவல் துறையினர் மக்களைக் கேட்டுள் ளனர்.இதே வேளை ஏ-9 வீதியில் தமிழீழ காவல்துறையின் வீதிப் போக்குவரத்துப் பிரிவினர் வீதி விபத்துக்களைத் தடுக்கும் முகமாக அண்மைக் காலங்களில் விசேட நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# முல்லை நுண்கலைக் கல்லூரியின் ஆடி மாதத் தமிழிசை விருந்து

(அலுவலக செய்தியாளர்)

முல்லை மாவட்ட நுண்கலைக் கல்லூரியின் ஆடிமாதத் தமிழிசை விருந்து நாளை மறுதினம் மாலை 4-30 மணியளவில் புதுக்குடியிருப்பு நுண்கலைக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என நுண்கலைக்கல்லூரியினர் அறியத்தந்துள்ளனர்.

மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகும் இந்நிகழ்வில் நுண்கலைக்கல்லூரி வாய்ப்பாட்டுப் பிரிவு மாணவர்களின் இசை நிகழ்ச்சி,அக்கல்லூரியின் வாத்தியப்பிரிவு மாணவர்களின் தாளவாத்தியக் கச்சேரி என்பவற்றுடன் சிறப்புத் தமிழிசை விருந்தினை இன்னிசை வேந்தர் உமாரமண சர்மா வழங்க உள்ளார். (கு)

## கண்டெடுப்பு

செ.செல்வம் முள்ளியவளை என முகவரியிடப்பட்ட பொருட்கள் பெற்ற சிட்டை உட்பட பல பொருட்களுடன் கூடிய கிற்பாக் ஒன்று கண்டெடுக்கப்பட்டு முல்லைத்தீவு காவல்பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் முல்லைத்தீவு காவல் பணிமனையில் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும். (20)

## வாழ்வோதயம் உதவி

(மன்னார்)

மன்னார் வாழ்வோதயம் அண்மையில் 130 முன்பள்ளி ஆசிரியைகளின் போக்குவரத்தை இலகு படுத்தும் நோக்கில் முதற்கட்டமாக 40 துவிச்சக்கர வண்டிகளை சிறுகடன் அடிப்படையில் வழங்கியுள்ளது. இவை இயக்குனர் அருட்திரு யேசுதாஸ் அடிகளாரால் வழங்கப்பட்டன.

## பயிற்சி

கரைதுரைப்பற்று கரையோர முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பு கடந்த 15.07.2004 முல்லை மக்கள் நலன்புரிச்சங்கத்தில் காலை 9.30 மணிக்கு ஆரம்பமானது.

பயிற்சியினை முல்லைவலைய முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு.வே.ஜெயம்சபாபதி வழங்கினார்.

இதில் முன்பள்ளி ஆசிரியர்கள், சமூகநலத்திட்ட இணைப்பாளர், முன்பள்ளி அபிவிருத்தி இணைப்பாளர் எனப்பெருமளவான வர்கள் கலந்து பயிற்சி பெற்றனர்.

இப்பயிற்சியானது முன்பள்ளிகளை மேன்மை அடைய செய்வதற்காகவே நடாத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (20)

# முல்லை, வவு.,திருமுறிகண்டியில் விபுலானந்தர் நினைவு நிகழ்வு

(வவுனியா)

வவுனியாவில் விபுலானந்தர் பாடசாலையில் விபுலானந்தர் தின நிகழ்வு கடந்த திங்கட்கிழமை சிறப்புற நடைபெற்றுள்ளது.

இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட நீதியாளர் எம். இளஞ்செழியன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றியபோது விபுலானந்தரின் நினைவு நாள் அனுஷ்டிக்கப் படுவதும், அவருக்கு சிலை அமைப்பதும் எடுத்துக்காட்டான விடயங்களாக அமைந்துள்ளன எனத் தெரிவித்தார். பட்டிமன்றம் உட்பட மாணவர் களின் கலை நிகழ்வுகளும் இந் நிகழ்வில் இடம்பெற்றன.

திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்தில் முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர் நினைவு தினத்தை முன்னிட்டு தமிழ் மொழித்தின விழா கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

தேசியக்கொடியை பிரதேசப் பொறுப்பாளர் திரு.கலைஞன் ஏற்றி வைத்தார். நிகழ்வை ஆசிரியர் திரு வினோதன் தலைமை தாங்கி நிகழ்த்தினார்.

தமிழ்த்தினப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கும் சிறந்த மரங்களை நாட்டிய மாணவர்கள் 20 பேருக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

கரைதுரைப்பற்று பிரதேசசெயலர் பிரிவிலுள்ள சகல பாடசாலைகளிலும் சுவாமி விபுலானந்தரின் நினைவுநாள் நிகழ்வுகள் நடைபெற்றன.

முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் காலை 10.00 மணிக்கு உயர்தர மாணவன் செல்வன் லெனாட்லக்ஷன் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் மங்கல விளக்கினை பிரதமவிருந்தினரான ஓய்வு பெற்ற அதிபர் திரு. சிவக்கொழுந்து, முல்லைத்தீவு மகாவித்தியாலய அதிபர் திரு. ம.அன்ரனி ஜெகநாதன் ஆகியோர் ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக் கொடியினை முல்லைத்தீவு மகாவித்தியாலய உப அதிபர் திரு.ஆ.குணநேசன் ஏற்றினார். கருத்துரைகளை முல்லைத்தீவு மகாவித்தியாலய அதிபர், முதன்மை விருந்தினர் திரு. சிவக்கொழுந்து ஆகியோர் நிகழ்த்தினார்கள். தொடர்ந்து தமிழை வாழ்த்தும் கலை நிகழ்வுகள் நடைபெற்றன. (20,09)


## தமிழ்த்தின விழா

உடையார்கட்டு மகாவித்தியாலயத்தில் காலை 10.00 மணிக்கு தமிழ்த்தின விழா சிறப்பாக இடம்பெற்றது. இத்தமிழ்த்தின விழா பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியர் திருமதி கை. அருள் ஞானமலர் தலைமையில் ஆரம்பமானது.விழாவிற்கான மங்கலவிளக்கு ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியினை பாடசாலை அதிபர் ஏற்றிவைத்தார். பாடசாலைக் கொடியினை பிரதி அதிபர் ஏற்றினார். தொடர்ந்து தமிழ்த்தின விழாவிற்கான கருத்துரையை ஆசிரியை திருமதி புவனேந்திரன், அதிபர் ராஜா ஆகியோர் வழங்கினர்.கருத்துரையை அடுத்து மாணவர்களின் கலைநிகழ்வுகள் பாடசாலை மண்டபத்தில் நிகழ்ந்தன.இதில் தமிழ்ப்பாரம்பரியத்தை பேணும் வகையில் நாட்டியம், நாடகம், கவிதை, பாடல்கள் இடம்பெற்றன. (19)

# கால்வாய் நோய்க்கு தடுப்பூசி ஏற்றப்படுகிறது

(புதுக்குடியிருப்பு)

முல்லை மாவட்டத்தில் ஒட்டுசுட்டான், துணுக்காய், புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேசங்களில், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும்,



கால் நடைஉற்பத்தி சுகாதாரத் திணைக்களமும் இணைந்து 400 கால் நடைகளுக்கு கால்வாய் நோய்க்கான தடுப்பூசி மருந்து போடப்பட்டுள்ளது. (08)

# திருகோணமலை நகரசபையின் உள்ளூராட்சி வார நிகழ்வுகள்

(திருகோணமலை)

உள்ளூராட்சி வாரத்தை ஒட்டி திருகோணமலை நகரசபை கடந்த திங்கட்கிழமை தொடக்கம் சிரமதானம், சுகாதார சுத்திகரிப்பு நூலகக் கண்காட்சி. மரநடுகைக் கருத்தரங்குகள் ஆகியனவற்றை ஒழுங்கு செய்துள்ளது. திருகோணமலை நகரில் உள்ளூராட்சி வார நிகழ்வுகள் நகர சபையின் விசேட ஆணையாளர் சுந்தரம் அருமை நாயகம், நகர சபையின் செயலாளர் சி.விபுலானந்தன் ஆகியோரின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உள்ளூராட்சிச் சட்டங்களை அமுற் படுத்துவதில் பொது மக்களின் பங்கு, டெங்கு ஒழிப்பில் பொதுமக்களின் பங்களிப்பு,கழிவு முகாமைத்துவத்தில் பொது மக்களின் பொறுப்பு முதலான தலைப்புக்களில் பாடசாலை மாணவர்களுக்கும் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கும் இவ் உள்ளூராட்சி வாரத்தில் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன. (25)

-சர்வதேச தொண்டர் அமைப்புக்களால்-

# நலத்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் அரைப்பங்கே குடாநாட்டில் செலவீடு!

(வடமராட்சி)

**கடந்த ஆண்டில் சர்வதேச தொண்டமைப்புக்கள் பலவற்றினாலும் குடாநாட்டில் பல்வேறு நலத்திட்டங்களிற்கு ஒதுக்கப்பட்டிருந்த நிதியில் 50 வீதத்திற்கும் குறைவான நிதியே முழுமையாகச் செலவிடப் பட்டுள்ளது.**

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம், யுனிசெவ், யு.என்.டி.பி, ஜிரிஇஸட், பட்டினிக் கெதிரான நிறுவனம், சுவிஸ் உதவி அமைப்பு, அம்டா மற்றும் யு.எஸ்.எயிட் உள்ளிட்ட பல சர்வதேச தொண்டமைப்புகளும் குடாநாட்டில் மேற்கொள்ளப்படும் பல்வேறு நலத்திட்டங்களிற்குமென கடந்த ஆண்டில் 720.82 மில்லியன் ரூபாவை நிதியாக ஒதுக்கியிருந்தன.

எனினும் ஆண்டின் இறுதிப் பகுதிவரை செலவிடப்பட்ட நிதி மொத்த ஒதுக்கீட்டில் 48.83 வீதமான 35.97 மில்லியன் ரூபாவெனத் தெரியவருகின்றது.

இதேவேளை குடாநாட்டில் விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்தவென இச்சர்வதேச தொண்டமைப்புகள் பலவும் கடந்த ஆண்டில் 117.02 மில்லியன் ரூபாவை ஒதுக்கியிருந்தன. எனினும் ஆண்டின் இறுதிப்பகுதிவரை அந்நிதி ஒதுக்கீட்டிலிருந்து 83.5 மில்லியன் ரூபா மட்டுமே செலவிடப்பட்டுள்ளது. இது மொத்தநிதி ஒதுக்கீட்டின் 71.36 வீதம், ஆகும்.

எனினும் கூடுதலான வேலைத் திட்டத்திற்கென நிதி ஒதுக்கப்பட்டிருந்த போதும் செலவீட்டுத் தொகை குறைவாக இருந்திருப்பின் இந்நிதி வித்தியாசம் தோன்றியிருக்கலாமென யாழ்.செயலக வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன. (27)

## வருடாந்த மகோற்சவம்

யாழ்.மாவட்டபுரம் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று ஆரம்பமாகி தொடர்ந்து 25நாட்களுக்கு இடம் பெறவுள்ளது. இவ் உற்சவத்திற்குச் செல்லும் பக்தர்களது நன்மை கருதி யாழ். நகரிலிருந்து விசேட போக்குவரத்து ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. (33)

## கொழும்புத்துறை பிரதேசத்தில் 135 வீடுகள் அமைக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொழும்புத்துறைப் பிரதேசத்தில் வடக்கு கிழக்கிற்கான வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 135 வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கப் படவுள்ளன.

கடந்தகால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் மற்றும் இடப்பெயர்வுகள் என்பவற்றால் வீடுகளை இழந்துள்ள மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு இவ்வாறு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

இவ்வாறான வீடமைப்புத் திட்டத்தின் முதலாவது கட்டப்பணிகள் பூர்த்தியடைந்திருப்பதாகவும் அமைக்கப்படவுள்ள வீடுகள் தெரிவு செய்யப்பட்ட 135 பயனாளிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் யாழ்.பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது. (33)

## ஆசிரியர் போட்டிப் பரீட்சை கிளிநொச்சிக்கு மாற்ற ஒழுங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மொழி மூல ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்காக போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் தற்பொழுது கிளிநொச்சி மாவட்டத்தில் தங்கியிருந்து கொழும்பில் பரீட்சை நிலையம வழங்கப்பட்டிருந்தால் அதனை மாற்ற ஏற்பாடு செய்துள்ளதாக யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 24ஆம் திகதி பரீட்சை நடைபெறவுள்ளதால் தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பரீட்சாத்திகள் சிலருக்கு கொழும்பில் பரீட்சை நிலையம் அமைந்துள்ளமை தொடர்பாக பரீட்சை ஆணையாளரிடம் தாம் தொடர்பு கொண்டதாகவும் இதனையடுத்து கொழும்பில் பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்கு தோற்றுமாறு அனுமதி அட்டை கிடைத்த கிளிநொச்சி மாவட்ட பரீட்சார்த்திகள் இலங்கை பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் ஜனாப்காசீக் என்பவருடன் 2785230,2786200 தொலைபேசி இலக்கத்துடனும் அல்லது (பக்ஸ்) 2784232 என்ற இலக்கங்களுடனும் தொடர்பு கொண்டால் பரீட்சை நிலையம் கிளிநொச்சி மாவட்டத்திற்கு மாற்றப்படும் என்று பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

## நெடுந்தீவு-குறிகாட்டுவான் பயணிகள் மீது கடற்படையின் கெடுபிடிகள் ஆரம்பம்!

-பொது அமைப்புக்கள் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு- குறிகாட்டுவான் படகுச்சேவையில் பயணிப்போர் மீதும் கடற்படையினர் தமது கெடுபிடி நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கின்றனர்.

மேற்படிப் பகுதியில் சேவையில் ஈடுபடும் படகுகளில் மக்கள் பயணித்துக் கொண்டிருக்கும் போது விசைப்படகுகளில் வரும் கடற்படையினர் பயணிகளை நடுக்கடலில் வைத்து வழிமறித்துப் படகுகளில் பயணிப்போரைச் சோதனை செய்தும், விசாரணைகள் செய்தும் வருகின்றனர்.

தற்போதைய யுத்தநிறுத்த காலத்திலும் கடற்படையினர் மேற்கொள்ளும் இந்நடவடிக்கைகள் மக்களின் இயல்பான போக்குவரவுக்கு அச்சுறுத்தலாக அமைகிறது.

இதுகுறித்துப் பலரும் விசனம் தெரிவித்து வருவதுடன் பயணிகளின் இயல்பான போக்குவரத்திற்கு இடையூறாக அமையும் இச்செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும் எனவும் நெடுந்தீவு மற்றும் குறிகாட்டுவான் பகுதி பொது அமைப்புகள் பலவும் கோரிக்கை விடுத்துள்ளன. (33)

## நோயாளர் காவு வண்டிகள் வைத்தியசாலைக்கு வழங்கல்

யாழ்.காரைநகர், வட்டுக்கோட்டை,வேலணை ஆகிய பிரதேசங்களில் உள்ள வைத்தியசாலைக்ளுக்கு நோயாளர் காவு வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. மேற்படி வைத்தியசாலைகள் மூன்றிலும் நோயாளர் காவு வண்டிகள் இன்மையால் நோயாளர்கள் படும் அசௌகரியங்களை கவனத்திற் கொண்டே சுகாதார பணிமனையினரால் இம் மூன்று வைத்தியசாலைகளுக்கும் தலா ஒவ்வொரு நோயாளர் காவு வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. (33)

## குருநகரில் வெடிமருந்துடன் கைதான மீனவருக்கு பிணை வழங்க எதிர்ப்பு

(வடமராட்சி)


வெடிமருந்துப் பொதியுடன் யாழ். நகரையண்டிய குருநகர் சீநோர் இறங்குதுறையில் வைத்து பிடிக்கப்பட்ட உள்ளூர் மீனவர்கள் நால்வரையும் பிணையில் விடுவிக்க யாழ். பொலிசார் ஆட்சேபனை தெரிவித்துள்ளனர்.


அத்துடன் குறித்த படகினை விடுவிக்கவும் அவர்கள் நீதிமன்றில் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக மேலும் தெரிய வருகையில்; கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை வேளை குடாக்கடற் பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படும் குறித்த படகு கரைதிரும்பிய வேளையில் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டிருந்த போது ஒரு கிலோக்கிராம் நிறை உடைய ரி.என்.ரி. வெடி பொருளும், வெடிக்கவைக்கும் ரிக்னேற்றர் நான்கும் கண்டு பிடிக்கப் பட்டிருந்தது.

இதயடுத்து அப்படகில் இருந்த குருநகர்பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் நால்வரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப் பட்டிருந்தனர்.

இம் மீனவர்கள் யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களையும், படகினையும் விடுவிக்கக்கோரும் மனுவொன்று யாழ். நீதிமன்றில் நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இம்மனுமீதான விசாரணையின் போது யாழ். பொலிஸார் குறித்த நான்கு மீனவர்கள் மீதும் நீதிமன்றில் வழக்குகளைத் தாக்கல் செய்யப்போவதாகத் தெரிவித்து பிணையில் விடுவிக்க ஆட்சேபனை தெரிவித்துள்ளனர். வழக்கின் தடயப்பொருளென தெரிவித்து படகை விடுவிக்கவும் அவர்கள் மறுத்துள்ளனர். இதையடுத்து விசாரணைகளை இன்று வரை மேலதிக நீதவான் திருமதி.ஸ்ரீநிதி நந்தசேகரன் ஒத்திவைத்த உத்தரவிட்டுள்ளார். (27)









உலகத்தமிழ் மாணவர் அமைப்பினால் கனடாவில் வருடாந்தம் ஜூலை மாதத்தில் நடாத்தப்பெறும் தமிழ் ஒலிம்பிக் போட்டிகள் ரொரன்ரோவில் கடந்த 17,18ஆம் திகதிகளில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இது குறித்த நிகழ்வுகளைப் படங்களில் காணலாம்.

தகவல்,படங்கள் : எழில்

## மண்ணில் அழிவடையும் பொலித்தீனை குடாநாட்டில் அறிமுகப்படுத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பொலித்தீன் பாவனையைத் தடை செய்வதற்கான முயற்சிகளை யாழ். அரசசெயலகம் மேற்கொள்ளவுள்ளதாக தெரியவருகிறது.

அழிக்கமுடியாத பொலித்தீன் வகைகளை மக்கள் அதிகம் பாவித்துவருவதால் சூழல் சமநிலையில் ஏற்படப்போகும் பாதகமான விளைவுகளை கவனத்தில் கொண்டு இதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதேவேளை மண்ணில் சேதமடையக் கூடிய பொலித்தீன் வகையை அறிமுகம் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (33)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள ஓய்வூதியர்களுக்கான முக்கிய கூட்டம் ஒன்று எதிர்வரும் 24 ஆம் திகதி யாழ். பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் ஓய்வூதியர்களுக்குள்ள பிரச்சினைகள் மற்றும் ஓய்வூதியம் பெறுவது தொடர்பான நடைமுறைகள் பற்றி அறிவுறுத்தல்களும் வழங்கப்படும். (33)

# சுழற்சி முறைப் பிரதமர் நியமனம்; — பண்டாரநாயக்க குடும்பத்தின் சுயநலனின் வெளிப்பாடு

இந்த நாட்டின் அரசியல் சரித்திரத்தில் இதுவரை ஏற்படாத ஒரு சிக்கலான பிரச்சினைக்கு தற்போதைய அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளது.

அதாவது சுழற்சி முறையில் பிரதமர் பதவியை மாற்றிமைப்பது என்றால் இந்த நாட்டுக்கு தலைமை தாங்கும் பொறுப்புடையவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்க வேண்டும்? இதுவே இன்றைய முக்கியமான விடயமாகும்.

இந்த நாட்டின்அரசியல் வெவ்வேறு கொள்கைகளை கடைப்பிடித்தவர்களால் கட்டி எழுப்பபப்பட்டதொன்றாகும். ஆகவே இப்படிப்பட்ட அரசியல் நோக்கம் கொண்ட கட்சிகள் ஒன்றிணைந்து அரசியல் நடத்தும் பொழுது கட்சியினுள் கொள்கை சம்பந்தப்பட்ட சொந்தப் பிரச்சினைகள் தலைதூக்க ஆரம்பிக்கும். ஆகவே ஒரு நிலையான அரசியற் கொள்கைகளும் தளம்ப ஆரம்பிக்கும்.

இலங்கை அரசியல் சரித்திரத்தில் இன்று இது நன்றாகப் புலப்படுகின்றது. தற்போதைய அரசின் முக்கிய பங்காளிகள்


அநுராபண்டாரநாயக்க

சிறிலங்கா சுதந்திரக்கட்சியினராவர். சிறிலங்கா சுதந்திரக்கட்சி பலதரப்பட்ட கொள்கைகளை கடைப்பிடிக்கும் ஒரு அரசியல் கட்சியாகும். இக்கட்சியில் பல திரைமறைவு சக்திகள் பின்னணியில் இயங்குகின்றன. அதாவது சனாதிபதி சனநாயக முதலாளி வர்க்கக் கொள்கைகளை கடைப்பிடிப்பவர். இது ஒரு சர்வாதிகாரப் போக்கைக் கடைப்பிடிக்கும் கொள்கையாகும். இதைச் சுட்டிக் காட்டுதல் பிழை இல்லை. இனவாதப் போக்குடையவர்களும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியினுள் தற்பொழுது செயற்பட்டு வருகின்றனர்.இது இக்கட்சியின் செயற்பாடுகளில் நன்றாகப் புலப்படுகின்றது. இதில் தமிழர்களுக்கு எதிரான பௌத்த இனவாத சித்தாந்தம் உள்ளடக்கப்பட்டிருக்கின்றது. இந்த இனவாதப் போக்கிற்கு தலைமை தாங்குபவர் அநுரா பண்டாரநாயக்க ஆவார். இதற்குத் துணை போவது ஜே.வி.பி அரசியல் கட்சியாகும்.

ஆனால் இக் கட்சிக்குள் பொது மக்களின் செல்வாக்குப் பெற்று அவர்களின் குரலுக்குச் செவி கொடுப்பவர்களும் உள்ளனர். இதில் முக்கியமானவர் தற்போதைய பிரதம மந்திரி மகிந்த ராஜபக்ஷ, இவர் தமிழர்களுக்கு விரோதமானவர் அல்ல; எல்லாப் பிரச்சினைகளையும் பொதுவாக கருதிச் செயற்படும் திறமை வாய்ந்தவர். ஏழை எளியவர்களுக்கு நன்மைகள் செய்ய வேண்டும் என்ற பரந்த நோக்கம் இவரிடத்தில் காணப்படுகின்றது. இதனால் இவர் கட்சியினுள் பெரும் சவால்களுக்கு முகம் கொடுக்க நேரிடும் என்பது கட்சிக்குள் இருக்கும் ஏனையவர்களின் செயற்பாடுகளின் மூலம் மிகத் தெளிவாகப் புரிகிறது.

ரணில்விக்கிரமசிங்கவும் சனாதிபதி சந்திரிகா கடைப்பிடிக்கும் சனநாயக முதலாளிவர்க்கக் கொள்கையையே கடைப்பிடிக்கிறார். எனவே எப்பொழுதும் முதலாளி வர்க்கத்தின் நன்மைகள் கருதியே ரணில் விக்கிரமசிங்க செயற்படுவார். எனவே சந்திரிகா அம்மையார் இந்த நாட்டில் வரும் சகல பிரச்சினைகளுக்கும் சமத்துவம் கொடுத்து, எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் அவரின் முதலாளி வர்க்கக் கொள்கைகளினால் முன்னெடுத்துச் செல்வது பெரும் தடையாக இருக்கிறது.

இந்த நாட்டில் விவசாயிகள், தொழிலாளர்கள், வறியவர்களின் செல்வாக்குகள் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு உண்டு. இதை மறுக்க முடியாது. செல்வந்தர்களின் சொத்துக்களும், தனியார் உரிமைகளும் தேசியமயமாக்கப்பட்டு ஏழை எளியவர்களுக்கு காணிப் பங்கீடு செய்தமை போன்றவைகளினால் மூன்றாம் வகுப்பினர்களின் செல்வாக்குகள் இவர்களுக்கு அதிகரித்தது. இதே இடதுசாரிக் கொள்கைகளைக் கடைப்பிடித்து ஏழைகள், விவசாயிகள், தொழிலாளர்கள் நலன் கருதிச் செயற்படுவர் தற்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆவார். சிறிலங்கா சுதந்திரக்கட்சிக் கொள்கையின் படி இடதுசாரிச் சிந்தனைகளைக் கொண்டுள்ள ராஜபக்ஷ போன்றவர்களுக்கு கட்சிக்குள் பல எதிர்ப்புக்கள் உண்டு. இவற்றை வென்று வெற்றி நடைபோடுவதற்கு ராஜபக்ஷ தீவிரமாகச் செயற்பட வேண்டிய கட்டத்திற்குத் தள்ளப்பட்டுள்ளார்.

பண்டாரநாயக்கவின் சர்வாதிகாரக் குடும்பம் கட்சியையும் சர்வாதிகாரப் போக்கில் நடத்தும் பொழுது இடதுசாரிக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் ராஜபக்ஷ போன்றவர்கள் கட்சிக்குள் செல்வாக்கைப் பெற்றிருப்பது அவரின் கடின உழைப்பாலேயேயாகும். இந்நிலையில் சந்திரிகா குமாரதுங்கவின் தலைமைக்குப் பின் அடுத்து சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமைப் பீடத்திற்கு யாரைத் தெரிவு செய்வது என்பது தான் தற்போதைய பிரதான கேள்வியாகும். அநுரா பண்டாரநாயக்கவைக் கட்சியின் தலைமைப்பதவிக்கு நியமித்தால், கட்சிக்குள் பல எதிர்ப்புக்கள் கிளம்பும், நாட்டு மக்களும் அநுராவின் தலைமை வகிப்பினை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். எனவே அடுத்த தலைவர்பதவி ராஜபக்ஷவுக்குப் போய்ச் சேரும். இவரின் தலைமைக்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் இனவாதக்கொள்கைகளைக் கடைப்பிடிப்பவர்களின் எதிர்ப்புக்கள் கிளம்புவதற்கு இடமுண்டு. இதனால்தான் சுழற்சி முறையில் பிரதமர் பதவியை மாற்றி அமைக்கும் திட்டம் சந்திரிகா குமாரதுங்கவினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. எதிர் வரும் சனாதிபதித் தேர்தலில் மக்கள் செல்வாக்கைப் பெற்ற மகிந்த ராஜபக்ஷவை கட்சியிலிருந்து ஓரம் கட்டுவதற்கு எடுக்கப்படும் துரித நடவடிக்கை இதுவாகும். நாட்டில் சனாதிபதி முறையை மாற்றியமைக்கும் திட்டம் இன்னும் அமுற்படுத்தப்படவில்லை. இதைமாற்றி அமைப்பதற்கு அரசாங்கத்திற்குப் பெரும் சிக்கல்கள் உண்டு. இதற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் இனவாதப்போக்கு முக்கிய காரணமாக அமைகின்றது.

மக்கள் அலை தென்பகுதி மக்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. வடகிழக்கிற்கும் இது பரவியுள்ளது. பொதுமக்களின் பிரதிநிதித்துவம் என்பதில் நாட்டின் சிறுபான்மை இனத்தவர்களும் இதில் அடங்குவர். அவர்களின் உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும். ஆனால் ஜே.வி.பி. போன்ற இனவாதக்கட்சிகள் சிறுபான்மை இனத்தவரின் பிரச்சினைகளைத் தீர்க்க முன்வராது தனிச் சிங்களம் என்ற போர்வைக்குள் நுழைந்துள்ளது. ஆகவே ஒடுக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளை முன்னெடுத்துச் செல்லும்பொழுது சிறுபான்மை இனத்தவர்களின் பிரச்சினைகளையும் முக்கியமாகத் தீர்க்க வேண்டிவரும். இதனால் மகிந்தராஜபக்ஷ போன்றவர்கள் பெரும் போராட்டத்திற்கு முகம் கொடுக்க நேரிடும். ஏனென்றால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இனவாதப் போக்குடையவர்களும், ஜே.வி.பி.யும் மகிந்தராஜபக்ஷவுக்கு குழிபறிப்பதற்குக் குறிபார்த்த வண்ணம் உள்ளனர்.

ஆகவே இந்த இனவாதப் போக்குடையவர்களிடமிருந்து ராஜபக்ஷ போன்றவர்கள் எதிர்நீச்சல் போட்டு வெற்றியீட்டுவது மிகக் கடினமாகும். சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் குடும்ப ஆதிக்கம் அதிகமாக உள்ளது. விவசாயிகள், கிராமிய மட்டத்தில் வறியவர்களின் பிரதிநிதித்துவம் பெற்று சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் உயர்பீடத்தைக் கைப்பற்றுவது இலகுவான காரியம் அல்ல.


கடந்தகால சரித்திரத்தை எடுத்துக் கொண்டால் கிராமிய, விவசாய மட்டத்தில் இருந்து வந்தவர்களை ஓரம்கட்டியமையால் அவர்கள் கட்சியிலிருந்து விலகிச் சென்றனர். முதலாளிவர்க்கக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் அரசியல் தலைவர்கள் எப்பொழுதும் கீழ்மட்டத்திலிருந்து வரும் தலைமைப்பீடத்தை ஓரம்கட்டுவதிலிருந்து

**ஜயவர்தன பல்கலைக்கழக அரசியல்பீட போதனாசிரியர் டெரன்ஸ் புரசிங்க,**

**(மொழியாக்கம்:- அ. சக்திவேல்)**

பின்வாங்க மாட்டார்கள். அவர்கள் தங்கள் நலன்களில் அக்கறை காட்டுபவர்களையும் தங்களின் ஆணைக்குக் கட்டுப்படுபவர்களையும் தலைமைப்பீடத்திற்கு நியமிப்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். பிரதமரை நியமிக்கும்; அவரை பதவியிலிருந்து நீக்கும் அதிகாரம் சனாதிபதி வசம் உள்ளதால் பிரதமரின் சுழற்சிமுறைத் திட்டத்தை நிறைவேற்றுவதில் சனாதிபதிக்கு அதிக சிரமம் ஏற்படாது. ஆனால் இதை நடைமுறைப்படுத்துவது அரசியல் நகைப்புக்குரிய விடயமாகும். பிரதமரை நியமிப்பதும், விலக்குவதும் சனாதிபதி கையில் இருந்தும் அவர் இன்றுவரை ஒரு பிரதமரையாவது பதவிநீக்கம் செய்யவில்லை. ஒரு அரசாங்கத்தின் ஆட்சிக்காலம் முடிவடையும் வரை அவர்கள் பிரதமர்களாகவே கடமையாற்றியுள்ளனர்.

வருடத்திற்கு ஒருமுறை சுழற்சி முறையில் பிரதமர்களை மாற்றும் திட்டத்தை மறைந்த சனாதிபதி ஆர்.பிரேமதாச கொண்டுவந்தார். இது நடைமுறைக்குச் சாத்தியப்படாதென அவரால் இத்திட்டம் கைவிடப்பட்டது. இப்பொழுது சந்திரிகா அம்மையார் நாட்டின் நலனுக்காகவோ அல்லது மக்களின் நலனுக்காகவோ இந்த சுழற்சிமுறைத் திட்டத்தைக்கொண்டு வரவில்லை. தனது குடும்பத்தின் சுயநலனுக்காகவே இந்த முறையைக்கொண்டு வருவதற்கு உத்தேசித்துள்ளார். இதற்கு ஜே.வி.பி.யின் ஒத்துழைப்பு உண்டு. சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் அரசியல் முன்


மகிந்த ராஜபக்ஷ

னேற்றத்தை நிறுத்தி அதன் மூலம் இலாபம் ஈட்டுவதே ஜே.வி.பி.யின் மூலோபதந்திரமாகும்.

ஏன் பிரதமர் பதவியை மட்டும் சுழற்சி முறையில் மாற்ற வேண்டும்? இப்படிப் பிரதமர் முறையை மாற்றியமைத்தால் நிச்சயமாக சனாதிபதி முறையையும் மாற்றியமைக்க வேண்டும். வருடத்தில் ஒருமுறை சனாதிபதியையும் மாற்றி அமைப்பதற்கு இடமுண்டு. எனவே நாட்டின் நலனுக்கு அல்ல சந்திரிகாவின் குடும்பநலனுக்கே இந்த திட்டத்தைக்கொண்டு வருவதற்கு சந்திரிகா முயற்சி செய்கிறார். மக்கள் ஆதரவைப் பெற்ற ஒருவர் நாட்டில் உயர் பதவியை வகிக்க முடியாமல் இருப்பதற்கே இந்தக் கபடநாடகமாகும். இந்தக் குடும்ப ஆதிக்கம் நாட்டில் ஒரு அரசியல் உறுதிப்பாட்டை ஏற்படுத்தாது. எந்நேரமும் அந்த அரசியல் ஒரு தளம்பல் நிலையில் இருக்கும். இதனால் நாட்டின் அபிவிருத்தி உட்பட சகல துறைகளினதும் முன்னேற்றம் ஸ்தம்பிதம் அடையும்.

நாட்டை ஒரு நல்ல நிலைப்பாட்டுக்குக் கொண்டு வரவேண்டுமானால் நாட்டிற்கு அந்நியநாட்டு உதவிகள் தேவை. சனநாயக முதலாளி வர்க்க சிந்தனை உடைய சந்திரிகாவின் ஆட்சிக்கு இந்த நாட்டில் நிலையான ஆட்சியைத்தர முடியாது. தற்பொழுது இந்த நாட்டிற்கு ஏழைகளின் நன்மதிப்பையும், சிறுபான்மையினரின் நன்மதிப்பபையும் பெற்ற கீழ் மட்டத்திலிருந்து வரும் ஒரு தலைவன் கட்டாயமாகத்தேவை. இது நாட்டின் எதிர் காலத்திற்கு மிக நன்மையாக இருக்கும்.

## பண்டாரவளை பூனாகலவில் 300 தொழிலாளர்கள் போராட்டம்

பண்டாரவளை பூனாகல தோட்டத்தில் சுமார் 300 தோட்டத் தொழிலாளர்கள் பணிப்புறக் கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் தோட்ட முகாமையாளரின் இல்லமும் தொழிலாளர்களால் முற்றுகையிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸினால் சந்தைத் தொகுதி ஒன்று திறந்து வைக்கப்பட்டிருந்தது. இந்த சந்தைத் தொகுதி கடந்த திங்கட்கிழமை இரவு எரியூட்டப்பட்டதை அடுத்தே அங்கு பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் காவல்துறையிடம் முறையிடப்பட்டுள்ளது. அதேநேரம் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கமும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் முனைப்பை மேற்கொண்டு வருகிறது. (32)

## நீதிமன்றின் சாட்சிமீது இனந்தெரியாதோர் குண்டுவீச்சு

குண்டுவீச்சுத் தாக்குதலுக்கு இலக்காகி இருவர் படுகாயம் அடைந்துள்ளனர். சென்ற சனிக்கிழமை நொச்சியாகமப் பொலிஸ் பிரிவில் இடம பெற்ற இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது; ராஜாங்கனை என்ற இடத்தில் கிணற்றில் குளித்துக்கொண்டு நின்ற இருவரின் மீது இனந்தெரியாதோரால் குண்டு வீசப்பட்டதாகவும் இதனால் இருவரும் படுகாயமடைந்ததாகவும் பொலிசார் தெரிவிக்கின்றனர். காயமடைந்துள்ள இருவரில் ஒருவர் கொள்ளைச் சம்பவ வழக்கொன்றின் சாட்சியென்றும் பொலிசார் கூறியுள்ளனர்.

- ஊவா மாகாண சபைக்கான -

## முதலமைச்சர் பதவி இருவருக்கு பகிர்வதற்கு முடிவு

ஊவா மாகாண சபைக்கான முதலமைச்சர் நிலை இருவருக்கு இடையில் பகிரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் அடிப்படையில் .மொனராகல மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் காமின் விஜித முனி சொய்ஸா முதல் இரண்டரை வருடங்களுக்கும், ஏ.எம் புத்ததாஸ அடுத்த இரண்டரை வருட காலப் பகுதிக்கும் முதலமைச்சர்களாக செயற்படவுள்ளனர்.

கடந்த மாகாண சபைத் தேர்தலில் ஊவா மாகாணத்தில் அதிகப்படியான வாக்குகளை புத்ததாஸவும், மொனராகலையில் அதிக விகித வாக்குகளை விஜிதமுனி சொய்ஸாவும் பெற்றிருந்தனர்.

இந்த நிலையில் புத்ததாஸவுக்கே முதலமைச்சர் பதவி வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி பதுளை மாவட்டத்தில் போராட்டங்கள் நடத்தப்பட்டன. இது கட்சிக்குள் பிரச்சினையை ஏற்படுத்தும் என்ற அச்சத்தை அடுத்து பொதுசன ஐக்கிய முன்னணி சம சந்தர்ப்பத தீர்வுக்கு முன்வந்துள்ளது. (32)

# இடிந்து விழும் நிலையிலுள்ள கட்டடத்தில் இயங்கும் முன்பள்ளி ,தபாற்கந்தோர், கிராம அதிகாரி அலுவலகம்

மன்னார், வட்டக்கண்டல் பகுதியில் மிகமோசமாகச் சேதமடைந்து அபாய நிலையிலுள்ள கட்டடம் ஒன்றில் முன்பள்ளி, உபதபாலகம், கிராம அலுவலர் அலுவலகம் என்பன இயங்கி வருகின்ளறன.

உலகிலேயே எங்கும் நிகழ்ந்திராத இந்தக் கொடுமை வன்னியில் தான் நிகழ்கிறது.தமிழ் மக்கள் என்பதற்காக அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் சிங்கள அரசு அசமந்தப்போக்கை கடைப்பிடித்து வருகிறது.இதற்கு சான்றாக நாம் கடந்து வந்த எமது 30வருட கால வரலாறே சான்றாகும் சிங்கள அரசுகள் தமிழ் மக்களின் தேவைகள் எதையும் பூர்த்தி செய்து கொடுக்கவில்லை என்பது உலகமே அறிந்த உண்மையாகிவிட்டது. தமிழ் மக்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் எவ்வித அடிப்படை வசதிகளும் செய்துகொடுக்கப்படாத நிலையில் அவல வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில்தான் மன்னார்

**அ.லோகீசன்**

வட்டக்கண்டல் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு எதிரே அமைந்திருக்கின்ற மிகவும் மோசமாக சேதமடைந்திருக்கின்ற கட்டடம் ஒன்றில் நாட்டின் எதிர்காலத்தைச் செதுக்கப் போகின்ற சிறார்களுக்கு ஆரம்பக் கல்வியை போதிக்கின்ற முல்லை முன்பள்ளி இயங்கி வருகின்றது. அது மட்டுமன்றி பதினேழு கிராமங்களுக்கு தபால் விநியோகப் பணியை மேற்கொண்டு வரும் வட்டக்கண்டல் உபதபாலகம், வட்டக்கண்டல் கிராமசேவகர் அலுவலகம் என்பனவும் இதே கட்டடத்தில் தான் இயங்கி வருகின்றன. இவ்வாறு பெரும் சேதமடைந்த நிலையில் பார்ப்பதற்கே அச்சத்தைத் தரக்கூடிய நிலையில் காணப்படும் இந்தக் கட்டடத்தினுள் ஒரு குடும்பமும் வசித்து வருகிறது என்பதுதான் மிகவும் கவலை தரும் விடயம். யாழ்ப்பாணத்தில் சிங்களப் படைகளின் உயர்பாதுகாப்பு வலயப்பிரச்சினையால் தமது சொந்த இடத்திற்குச் செல்லமுடியாத நிலையில் இந்தக்குடும்பம் இங்கே வசித்துவருகிறது.

மேற்குறித்த கட்டடத்தின் உரிமையாளர்கள் மன்னாரில் இல்லை அவர்கள் இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து வேறு பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர்.இந்த நிலையில் மேற்குறித்த கட்டடம் பொதுத் தேவைகளுக்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

யுத்தத்தின் விளைவுகளினால் இந்தக் கட்டடத்தில் பெரும் வெடிப்புக்கள் ஏற்பட்டுள்ளது. இதனால் எந்தவேளையும் இடிந்து விழலாம் என்ற அச்சநிலை காணபபடுகின்றது. இத்தகைய நிலையில் உள்ள இந்தக் கட்டடத்தில் சிறார்களிற்கான அடிப்படைக் கல்வியை வழங்கி வரும் முல்லை முன்பள்ளி இயங்கி வருகிறது. அது பற்றி முன்பள்ளி ஆசிரியர்

> **மன்னார் - வட்டக்கண்டல் முல்லை முன்பள்ளி, உபதபாலகம், கிராமசேவை அலுவலர் அலவலகம், ஆபத்தான - இடிந்துவிழும் நிலையிலுள்ள ஒரே கட்டடத்தினுள் இயங்கும் அவலம். இது எத்தனை நாள் நீடிக்கப் போகிறது என்பது அந்த மக்களின் ஆதங்கம்.**

களான அ.குமுதினி, ஆ.அருட்செல்வி ஆகியோரிடம் கேட்ட போது எந்தக் கட்டடங்களும் இல்லாதநிலையில் இந்த மாணவர்களுக்கு கல்வி கற்பிப்பதற்காக இந்தக்கட்டடத்தைப் பயன்படுத்தி வருகிறோம்.

இங்கு 30 சிறுவர் சிறுமிகள் அடிப்படைக்கல்வி பயின்று வருகின்றனர். இவர்களில் 25 பேருக்கு மாத்திரமே தளபாட வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. ஏனைய 5 பேருக்கும் தளபாடம் இல்லாத நிலை காணப்படுகிறது. அது மாத்திரமல்லாமல் இந்த சிறார்களின் போசாக்கு நிலை திருப்தி தரும் வகையில் இல்லாதிருக்கிறது எனவும் கடந்த 2002ஆம் ஆண்டு முதல் இம்முன்பள்ளி இந்தக்கட்டடத்திலேயே இயங்கி வருகிறது எனவும் தெரிவித்தனர். இது முல்லை முன் பள்ளியினுடைய நிலைமை.

அடுத்ததாக குறித்த கட்டடத்தில் இயங்கி வரும் வட்டக்கண்டல் உப தபாலக அதிபர் இ.இருதயமலர் அவர்களுடன் தொடர்பு கொண்டு உபதபாலகம் பற்றிக் கேட்டேன்.

1996 ஆம் ஆண்டு முதல் 1999 ஆம் ஆண்டு வரை ஆலங்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் உபதபாலகம் இயங்கி வந்தது. பின்னர் இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்து சென்று, மீண்டும் வந்த போது குறித்த வீடு பிறிதொரு செயலகப் பாவனைக்காக பயன்படுத்தப்படுகிறது. இதனால் இந்த மக்களுக்கான தபால் சேவையை நடத்துவதற்காக இத்தகைய அபாயம் நிறைந்த பாதுகாப்பற்ற கட்டடத்தில் எமது உபதபாலக செயற்பாட்டை ஆரம்பித்தோம்.

இப்போது தபால்களை தரம் பிரிப்பதற்கான தளபாடங்கள், பாதுகாப்பதற்கான தளபாடங்கள் எதுவுமே இல்லாத நிலையில் தான் எமது செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. 1500இற்கும் அதிகமான மக்கள் இந்தத் தபாலகத்தின் மூலமே தபால் போக்குவரத்துக்களை மேற்கொள்கின்றனர். எனவும் எப்போது தான் நாம்படும் அவல நிலை தீரப்போகிறதோ தெரியவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.இந்த நிலை எத்தனை நாள் வரை தொடரப்போகிறது என்பது தான் அந்த மக்களின் ஆதங்கம்.

# வடகிழக்கில் தமிழர்-முஸ்லிம்கள் பிரிந்து வாழ்வது முடியாத காரியம்

## -அமைச்சர் அதாவுல்லாஹ் தெரிவிப்பு-

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் தமிழ்-முஸ்லிம் சமூகங்கள் பிரிந்து வாழ முடியாது. அவ்வாறு பிரிந்து வாழவும் கூடாது என கிழக்கு உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லாஹ் தெரிவித்தார்.

வடக்குக் கிழக்கு தமிழ் முஸ்லிம் சகோதர சமூகங்களை சுயநலன்களுக்காகப் பிரித்து வைக்கும் சக்தியினை எவரும் மேற்கொண்டு வெற்றி பெற்றால் அது தற்காலிகமானதாகவே அமையும் அவ்வாறானவர்கள் எதிர்காலத்தில் நிரந்தரமான தோல்வியினை சந்திக்க நேரிடும் என்று அமைச்சர் அதாவுல்லாஹ் கூறினார்.

ஏறாவூர் அறபா வித்தியாலயத்தின் 80ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்பட்ட விசேட வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் அதாவுல்லாஹ் இக்கருத்துக்களை வெளியிட்டார்.

முஸ்லிம் சமூகம் கடந்தகாலங்களில் அரசியல் களத்தில் வெளிச்சமாக நம்பியிருந்த எதிர்பார்ப்புக்கள் தற்போது இருட்டாக மாறிவிட்டன. சமகால அரசியல் தலைமைகளிடம் சமூக உணர்வும், உண்மைத் தன்மையும் இல்லாமையே இதற்குக் காரணம் எனவே அனைத்து விடயங்களிலும் உண்மையை வெளிப்படுத்தக் கூடிய மனிதநேயம் மிக்கவர்களை உருவாக்க நாம் பாடுபட வேண்டும் என்றும் அமைச்சர் அதாவுல்லாஹ் கேட்டுக்கொண்டார். (32)

# வெளிநாடுகளிலிருந்து சீனியை மேலும் இறக்குமதி செய்ய முடிவு

(கொழும்பு)

பிரேசில் உட்பட வெளிநாடுகளிலிருந்து சீனியை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளது. தற்போது உலக சந்தையில் சீனிவிலை அதிகரித்துள்ளதால் மேலும் சீனியின் விலை அதிகரிக்கக் கூடும் என வாணிப அமைச்சர் ஜெயராஜ் பர்ணான்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

வெகு விரைவில் சீனியை இறக்குமதி செய்து மக்களுக்கு விநியோகம் செய்யப் போவதாகவும்,எமது நாட்டில் உற்பத்தியாகும் சீனி.,பாவனைக்கு காணாதபடியால் இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பாதுகாப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

கண்டி எசல பெரஹராவை முன்னிட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன இதன் நிமித்தம் சுமார் 7 ஆயிரம் சிறிலங்கா காவல்துறையினர் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். கண்டி எசல பெரஹரா இன்று ஆரம்பமாகி, ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி வரை இடம்பெறவுள்ளது

# ஆசிரியர்களுக்கான தரக் கணிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டம் சனவரியில் அமுல்

ஆசிரியர்களுக்கான தரக்கணிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டத்தை அடுத்த ஆண்டு சனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் சகல பாடசாலைகளிலும் கண்டிப்பாக அமுல்படுத்துமாறு கல்வியமைச்சின் செலாளர் டாக்டர் தாரா டிமெல் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

அடுத்த ஆண்டு ஆசிரியர்களுக்கான வருடாந்த சம்பள உயர்ச்சிகளை வழங்கும் போது ஆசிரியர்களுக்கான தரக்கணிப்பீட்டு நிகழ்ச்சித திட்டம் அவசியம் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

அனேகமான பாடசாலைகளுக்கு இது தொடர்பான படிவங்கள் இதுவரை கிடைக்கப் பெறவில்லை என்று கல்வியமைச்சுக்கு பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. ஆசிரியர் செயலாற்றுகை தரக் கணிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டத்திற்கு தேவையான படிவங்களை அச்சிட்டு விநியோகிப்பது அந்தந்த மாகாணங்களில் மாகாணக்கல்விப் பணிப்பாளர்களின் பொறுப்புக்கு உட்பட்ட விடயமாகும் எனவே சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களும் மாகாண கல்விப்பணிப்பாளர்களுடன் இணைந்து ஆசிரியர் செயலாற்றுகை தரக்கணிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டத்தை வெற்றிகரமாக அமுல் படுத்துவதற்கு பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என்றும் கல்வியமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

# 83 ஜுலை கலவரத்தில் பாதிக்கப்பட்டு இனங்காணப்பட்டோருக்கு நட்டஈடு

## -சனாதிபதி சந்திரிகா தீர்மானம்

1983ஆம் ஆண்டு ஜுலைக் கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடாக 72.3 மில்லியன் ரூபாவை வழங்க சனாதிபதி தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

அடுத்த மாத இறுதிக்குள் இந்த நட்டஈட்டுத் தொகை செலுத்தப்படும் என்று சனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1981ஆம் ஆண்டு முதல் 84ஆம் ஆண்டு வரை விசேடமாக 83ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில் இடம்பெற்ற இனக் கலவரத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த நட்டஈடு வழங்கப்படவுள்ளது. இந்த விடயம் தொடர்பாக ஆராய்வதற்காக சனாதிபதி கடந்த 2002ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30ஆம் திகதி மூவரடங்கிய குழுவொன்றை நியமித்தார். இந்தக் குழுவினர் நிவாரணம் வழங்குவதற்கு தகுதி வாய்ந்தவை என்று 937 முறைப்பாடுகளை இனம் கண்டுள்ளார்கள். இவர்களுக்கான நிவாரணங்களை வழங்கும் வைபவத்தில் சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, புனர்வாழ்வு புனரமைப்பு இன நல்லிணக்க அமைச்சர் என்ற வகையில் எதிர்வரும் வெள்ளிக் கிழமை தெரிவு செய்யப்பட்ட 30 பேருக்கு நட்ட ஈட்டை வழங்குவார் என்று சனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஆராயவென்று அமைக்கப்பட்ட மூவரடங்கிய ஆணைக்குழுவில் ஓய்வுபெற்ற நீதியரசர் எஸ்.சர்வானந்தா, சனாதிபதி சட்டத்தரணிகளான எஸ்.எஸ்.சகபந்து, எம்.என்.சுஹைர் ஆகியோர் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# சனநாயகத்திற்கெதிராக தமிழரசுக் கட்சி செயற்படின் ஆளும் கட்சியுடன் ஜா.ஹெ. உறுமய இணையும்

## ஜா.ஹெ. உறுமய பாராளுமன்றக் குழுத் தலைவர் எச்சரிக்கை

(கொழும்பு)


இலங்கை தமிழரசுக் கட்சி பாராளுமன்ற சம்பிரதாயங்களுக்கும் சனநாயகத்திற்கும் எதிராகச் செயற்பட்டால் நாட்டின் ஸ்திரத் தன்மையைக்காக்க ஆளும் கட்சியுடன் இணைந்து செயற்படத் தயாரென ஜாதிய ஹெலஉறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் குழுவின் தலைவர் அத்துரலிய இரத்னதேரர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்ற அமர்வின் போது இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்த கருத்துக்களுக்கு ஆட்சேபனை தெரிவிக்கும் வகையிலேயே இரத்னதேரர் இவ்வாறு தெரிவித்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் பாராளுமன்ற சம்பிரதாயங்களின் படி பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்த மூன்றாவது தரப்பொன்று இல்லாமையினாலேயே தாம் எதிர்க்கட்சித் தரப்பில் அமர்ந்துள்ளதாகத் தெரிவித்த அவர், இலங்கைத் தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் சனநாயகத்திற்கு எதிரானவை என்றும், அரசாங்கமும் எதிர்க்கட்சியும் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

## 6 ஆம் ஆண்டு நினைவலைகள்

தாயின்
மடியில்
10
*
12
*
1978



தாயக
மண்ணில்
22
*
07
*
1998

### 2 ஆம் லெப்·கரிகாலன்
### (தர்மலிங்கம் முரளிதரன்)

மூசியடங்கிய எரிமலையே
உன் முகவரிகள்
தேடியழைக்கும் நீலக்கடலை.
ரிதம் உச்சரிக்கும் நாமவரிகளுக்குள்
புதையுண்டு கிடக்கிறது. புரிகிறது.
வானுயர்ந்த உன் உணர்வுகளை
விஞ்சிவிட எம்மால் இயலாது.
கொஞ்சும் மழலையழியா
பிஞ்சுமுகத்துடன் நீ பறந்தோடிச் சென்றதால்
நெஞ்சழியும் வரை நின் நினைவுகளை
நொந்து சுமக்கின்றோம்.
கரிகாலா –கனவில் ஒருமுறை உன்
திருமுகம் காணக் கலங்கும் உன்
உறவுகளை ஒரு கணம் வந்து பாரடா.


இல -13,
ஆனந்தபுரம்,
கிளிநொச்சி.

(4834)

உமது துயரால் வாடும்,
அன்பு அம்மா, அப்பா,
சகோதரர்கள், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி
22 - 07 - 2004

மலர்வு
1966
-
06
-
25



உதிர்வு
2004
-
06
-
22

அமரர்

### இராமு செல்வராஜன் (சுபாஸ்)
(திருகோணமலை)
### உதயநகர் கிழக்கு, கிளிநொச்சி.

அன்பின் உருவமாய், ஆற்றலில் வல்லோனாய், நிறுவனத்தின் ஆணிவேராய், நிலை கொண்ட மூத்த உறுப்பினராய் ...." சாதிக்கவும் சரித்திரம் படைக்கவும் ஊனம் ஒரு தடையல்ல" என்பதை வாழ்ந்து காட்டிய மாற்றீடான வலு உள்ளவன் சுபாஸ், எமது கிளி. ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தில் அங்கத்தவராகவும், பணியாளராகவும் இருந்து போரின் மத்தியிலும், இடப்பெயர்வின் போதும், சங்கத்திற்கும், மாற்றீடான வலுவுள்ளவன் மனத்தைரியமும், நம்பிக்கையுமிருந்தால், வாழ்வில் முன்னேற முடியும் என்பதை, வீட்டுத்தோட்டம், கால்நடை வளர்ப்பு, எலக்ரிக் வேலை, பெயின்ரிங் என்பவற்றிலும், சாதனைகள் பல புரிந்து இரவு பகலாக உழைத்தவனே, அங்கத்தவர்களின் உரிமைகளைத் தட்டிக்கேட்டுச் சரித்திரம் படைத்தவனே... நிறுவனத்தின் வளர்ச்சிக்கு தொடர்ந்தும் ஆக்கத்தையும், ஊக்கத்தையும் தருவாய் என்று எதிர்பார்த்த எமக்கு இளம் வயதாகிய 37 வயதில் எம்மை விட்டுப் பிரிந்ததை நினைத்து, ஆறாத்துயரில், நீங்காத நினைவுகளுடன் உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கிளி மாற்று வலுவுள்ளோர்
புனர்வாழ்வுச் சங்கம்,
(கரோட்) கிளிநொச்சி.

(4835)

அங்கத்தவர்கள்,
பணியாளர்கள்,
நிர்வாகத்தினர்.

# போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டம் (கார்ப்)

### ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
### கடன் இலக்கம்-2043-ஸ்ரீ (எஸ்.எப்)

### கிளிநொச்சி மாவட்டத்தில் சமூக மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு பங்குதாரராவதற்கான அரச சார்பற்ற நிறுவனங்களின் (என்.ஜீ.ஓ) விருப்ப வெளிப்பாடு பற்றிய அழைப்பு.

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத்திட்டத்தின் ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளது. வடகிழக்கின் போரினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் பிரதானமாக யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை மீளமைப்பதற்கு அத்தியாவசிய உட்கட்டமைப்பு வேலைகளுக்கு உதவிகளை நல்குவதுமே இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். இத்திட்டம் வடகிழக்கு மாகாணத்தில் உள்ள எட்டு மாவட்டங்களில் செயற்படுவதோடு விடுவிக்கப்பட்ட, விடுவிக்கப்படாத பகுதிகளையும் உள்ளடக்கியதாகும்.

இத்திட்டம் அரசாங்கத்திணைக்களங்களின் உதவியுடன்(அரசதிணைக்களங்கள், திட்டவெளிக்கள உத்தியோகத்தர்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள்) உள்ளூர் சமுதாய அமைப்புக்களினாலும், உள்ளூர் சமூகங்களினாலும் அமுல்படுத்தப்படும் இந்த சமூக அபிவிருத்தி உபகருத்திட்டங்கள் சமூகத்தை மையமாகக் கொண்ட சமூகத்தவர்களின் பூரணபங்களிப்போடு செயற்படுத்தப்படும். இத்திட்டத்தில் பயன்பெறும் சமூகத்தினர் இத்திட்டத்தை திட்டமிடுவதிலும், நடைமுறைப்படுத்துவதிலும் இத்திட்டத்தின் அன்றாட அபிவிருத்தி வேலைகளைக் கண்காணிப்பதிலும் முற்றாகப் பங்களிப்புச் செய்வதை உறுதிப்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒவ்வாரு மாவட்டத்திலும் இத்திட்டத்தை அமுல் நடத்துவதற்காக சில கிராமங்கள் ஆரம்பத்தில் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் வெற்றிகரமான செயற்பாடுகளைப் பொறுத்து மேலும் பல கிராமங்கள் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படும்.

பின்வரும் கிராமங்களில் இனங்காணப்பட்ட சமூகத்தினரிடையே சமூக அபிவிருத்தித்திட்டங்களை செயற்படுத்துவதற்கும், சமூகத்தை அபிவிருத்திக்கு தயார்ப்படுத்துவதற்கும், வளங்களை ஒன்றுபடுத்துவதற்கும், நிறுவன ரீதியான அபிவிருத்தியை உருவாக்குவதற்கும் ஏற்கனவே வடக்கு கிழக்கில் திட்டங்களை வெற்றிகரமாக செயற்படுத்தும் தகுதிவாய்ந்த அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து விருப்பத்தை வெளிப்படுத்துமாறு அழைப்பு விடுக்கப்படுகிறது.

| இல | மாவட்டம் | உதவிஅரசாங்க அதிபர் பிரிவு | கிராமம் |
|---|---|---|---|
| 01 | கிளிநொச்சி | பச்சிலைப்பள்ளி | வண்ணாங்கேணி வடக்கு |
| 02 | கிளிநொச்சி | பூநகரி | நெற்புலவு |
| 03 | கிளிநொச்சி | பூநகரி | மட்டுவில் நாடு மேற்கு |
| 04 | கிளிநொச்சி | கரைச்சி | சோலைநகர் |
| 05 | கிளிநொச்சி | கண்டாவளை | பெரியபரந்தன் |

ஆர்வமுடைய அரசசார்பற்ற நிறுவனம் இது பற்றி மேலதிக விபரங்களை வேலை நாட்களில் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணிவரை கிளிநொச்சி மாவட்ட செயலாளர் / அரசாங்க அதிபரிடமிருந்து (தொலை பேசி 021-228 3945, தொலைநகரி 021-2283965) பெற்றுக்கொள்ளலாம்.

இத்திட்டத்தை அமுல் நடத்த விரும்பும் தகுதி வாய்ந்த அரசசார்பற்ற நிறுவனம் தங்களுடைய விருப்பத் தெரிவை மாவட்ட செயலாளருக்கு/ அரசாங்க அதிபருக்கு .

**ஓகஸ்ட் 12,2004 அன்று (12/08/2004) மாலை 3.00 மணிக்கு முன்பதாகத் தெரிவிக்க வேண்டும். ஒவ்வொரு கிராமத்துக்கும் விருப்பத் தெரிவு வெவ் வேறாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.**

விருப்பத் தெரிவை அறிவிக்கும் பொழுது பின்வரும் விபரங்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

01. விண்ணப்பிக்கும் நிறுவனம் பற்றிய விபரங்கள், நிறுவனத்தின் நோக்கம், முகவரி, தொலைபேசி இலக்கம் , சட்டரீதியாக பதிவு செய்த விபரங்கள், ஆளணிகள், நிறுவன ஒழுங்கமைப்பு , கிளைக்காரியாலயம் முதலியன
02. தொழில் சார் அனுபவமுடைய நிபுணர்களின் எண்ணிக்கையும் நிபுணத்துவம் பெற்ற துறையும்.
03. வடக்கு கிழக்கு மாகாணத்தில் புனரமைப்பு சமூக அபிவிருத்தி வேலைகளில் உள்ள அனுபவம்.
04. விசேடமாக வடக்கு கிழக்கில் சமூக ஒருங்கிணைத்தல் , சமூக பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகள், சிறு குழுக்களை உருவாக்கல் , சிறிய கடன் நடவடிக்கைகளை உருவாக்குதல் ஆகியவற்றில் உள்ள அனுபவம்.
05. வடக்கு கிழக்கில் தற்போது தாங்கள் நடைமுறைப்படுத்தும் வேலைத் தொகையும் , கடந்த ஐந்து வருடங்களாக நடை முறைப்படுத்திய வேலைத் திட்டங்களின் விபரங்களும்.
06. இக்குறிப்பிட்ட துறையில் சாதித்த குறிப்பிடத்தக்க சாதனைகள்.
07. விருப்பத் தெரிவிற்கான வேறு ஏதாவது தகவல்கள்.

எல்லா ஆவணங்களும் விண்ணப்பமும் அந்தரங்கமாகப் பேணிக்காக்கப்படும் என்பதையும் அவைகள் திருப்பி அனுப்பப்பட மாட்டாது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தி.இராசநாயகம்
மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி-10032)

# 06ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாய்மடி மலர்வில் 10.12.1978

தாய் நிலம் தேடிய புலர்வில் 22.07.1998



## 2ம் லெப்டினன் கரிகாலன்

தர்மலிங்கம் முரளிதரன்
(கிளிநொச்சி)

ஈழ விடுதலைக்காய் நீ விதைத்த
அர்ப்பணிப்பு - இன்று
அமைதியாய் அரும்புவிட்டு வளர்வதை
விண்ணில் நீயும் மின்மினியாய்- நின்று
விடியப்போகும் ஈழமதை முத்தமிடுவாய்

எமது சோழன் சி.க.உ.கூ. சங்கத்தின் தலைவர் ஐ. தர்மலிங்கம் அவர்களின் மகன் முரளிதரனின் 6 ஆம் ஆண்டு நினைவு நாளில் நாமும் எமது இதய அஞ்சலியைச் செலுத்தி நினைவு கூருகின்றோம்.

நிர்வாகமும், அங்கத்தவர்களும்
சோழன் சி.க.உ.கூ.சங்கம் திருவையாறு
(4833)


# "போர்நிறுத்த உடன்பாட்டை இரத்துச்செய்க" மனுமீதான விசாரணை ஒத்திவைப்பு

(கொழும்பு)

"போர்நிறுத்த உடன்பாட்டின் பிரதிவாதித்" தரப்பாக அமைச்சரவை உறுப்பினர்களை ஏற்றுக் கொள்ள வேண்டும்; மற்றும்போர் நிறுத்த உடன்பாட்டை இரத்துச் செய்ய வேண்டும் எனக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் எதிர்வரும் ஓகஸ்ட் 2 ஆம் திகதிவரை ஒத்திவைத்துள்ளது.

இந்த மனுவை ஜே.வி.பி,மற்றும் ஹெல உறுமய, என்பன தாக்கல் செய்துள்ளன.இதனை ஏற்கனவே விசாரணைக்கு எடுத்துள்ள நீதிமன்றம் நேற்று முன்தினம் மிண்டும் விசாரணையை ஆரம்பித்த போது திகதி ஒத்திவைப்பை அறிவித்திருக்கிறது. சிறிலங்காவின் முன்னாள் பிரதமரும், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரும் செய்துகொண்ட ஒப்பந்தமே இரத்துச் செய்யப்பட வேண்டும் . ஏற்கனவே அதற்குப் பொறுப்பாக வுள்ள ரணில் விக்கிரமசிங்க, தலைவர் திரு.வே. பிரபாகரன், ரணில் விக்கிரமசிங்கவின் அமைச்சரவை ஆகியோருக்குப் பதிலாக இலங்கை நாட்டின் புதிய அமைச்சரவை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் எனக்கோரியே இம்மனு தாக்கல் செய்யப்பட்டது.

## பதவி உயர்வு

சிறிலங்கா கடற்படைக் கொமாண்டராகப் பணியாற்றிய ஹர்ஸமாயதுன்ன ரியர் அட்மிரல் பதவிக்கு தரமுயர்த்தப்பட்டுள்ளார். கடற்படைச்சேவையில் இவர் தளபாட வழங்குநர்,சேவைகள் பணிப்பாளர் பதவிகளை வகித்தவர் என்பதும் வடக்கு கிழக்குப் பகுதிகளில் கடமையாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.


இந்தியப் பரம்பரைச் சோதிடர்
மணிசாமி அவர்கள்
யாழ்ப்பாணம் வருகை

ஸ்ரீசோட்டாநிக்கரை பகவதி அம்மன் அருள் பெற்ற ஸ்ரீ வெட்காளியம்மாவின் அருந்தவப் புதல்வன் மீண்டும்

P.T.R., சாமி இரட்டையர்கள
யாழ்ப்பாணம் புண்ணிய பூமிக்கு வருகை .

கைரேகை, ஜாதகம், எண்கணிதம், நினைத்த காரியம் பார்க்கப்படும். திருமணத் தடங்கலா? காதல் தோல்வியா? தீராத வியாதியா? உயர் கல்வியில் தடங்கலா? கடன் தொல்லையா?தொழில் முன்னேற்றத் தடங்கலா?புதிய தொழில் தொடங்க வேண்டுமா?குழந்தைப்பாக்கியம் இல்லையா? வெளிநாடு செல்லத் தடையா?

ஸ்ரீ பாலாஜி விடுதி,
293,கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம், (கன்னாதிட்டிச் சந்திஅருகில்)
(33885) (11-184-26)
தொலை.பே.222-2341
(பார்வையிடும்நேரம்
9.00மணிமுதல் 5.00 மணிவரை.)
(சி.9758)



முல்லை.மாவட்ட நுண்கலைக் கல்லூரியின்

# ஆடிமாத தமிழிசை விருந்து



இடம் : புதுக்குடியிருப்பு நுண்கலைக் கல்லூரி மண்டபம்
காலம்: 24-07-2004 சனிக்கிழமை, மாலை 4.30 மணி

நிகழ்ச்சிகள்

**4.30 மணி**
மங்கல விளக்கேற்றல், தேசியக் கொடியேற்றல், அகவணக்கம்

**4.45 மணி**
நுண்கலைக்கல்லூரி வாய்ப்பாட்டுப் பிரிவு மாணவர்களின் இசைநிகழ்ச்சி.

**5.00 மணி**
நுண்கலைக்கல்லூரி வாத்தியப்பிரிவு மாணவர்களின் தாளவாத்தியக் கச்சேரி.

**5.15 மணி**

## சிறப்புத் தமிழிசை விருந்து

| | |
|---|---|
| பாட்டு: | இன்னிசை வேந்தர் திரு. உமா ரமண சர்மா |
| வயலின்: | இசைக்கலைமணி திரு. சு. கோபிதாஸ் |
| மிருதங்கம் : | இசைக்கலைமணி திரு.க. கண்ணதாசன் |
| தபேலா: | கலாவித்தகர் திரு.சதா. வேல்மாறன் |
| முகர்சிங்: | கலாவித்தகர் திரு.க. சதீஷ்குமார் |

கலை விருந்தருந்த தங்களை அன்புடன் அழைக்கின்றோம்
நுண்கலைக்கல்லூரியினர்
(4828)



# தமிழீழ போக்குவரவுக் கழகம்

## பருவகாலச் சீட்டு பெறுவோர் கவனத்திற்கு

தமிழீழப் போக்குவரவுக்கழக பருவ காலச்சீட்டுப் பெறுவோர் (மாணவர் உட்பட) ஒவ்வொரு மாதமும் 25 ஆம் நாள் தொடக்கம் 30 ஆம் நாள் வரை பின்வரும் இடங்களில் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| முல்லைத்தீவு | - | பேருந்து நிலையம் |
| பளை | - | பேருந்து நிலையம் |
| கிளிநொச்சி | - | பேருந்து நிலையம் |
| புளியங்குளம் | - | பேருந்து நிலையம் |
| மல்லாவி | - | பேருந்து நிலையம் |
| புதுக்குடியிருப்பு | - | பேருந்துப் பகுதி புதுக்குடியிருப்பு |
| பு,நகரி | - | மகாவித்தியாலயம் பு,நகரி |

25 ஆம் நாளுக்கும் 30 ஆம் நாளுக்குப் பின் சீட்டுக்கள் வழங்கப்படமாட்டாது என்பதையும் அறியத்தருகின்றோம்.

தமிழீழ போக்குவரவுக்கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(4837)



# கோடைகால ஜில்சொப்பிங்

* முகூர்த்தப்பட்டுச் சாறிவகைகள்
* வெளிநாடுகளில் இருந்து உடனுக்குடன் இறக்குமதி செய்யப்பட்ட நவீன டிசைன்களில்
* சாறிவகைகள் * சேட்,T.சேட் * சூட்வகைகள்
* ஜம்பர்வகைகள் * ரவுசர்த்துணிவகைகள் * கவுண்வகைகள்
* டெனிம், சோக்கோ ரவுசர் வகைகள் * கோட்சூட்
* ஸ்கேட் & பிளவுஸ் வகைகள் * பேபி கவுண் வகைகள்

போன்றவற்றைப் பெற்றுக்கொள்ள

தரமாகவும் மலிவாகவும்

## மிலேனியம் பெஷன் & பொம்பே பஜார்

T.P.:0214590174
இல.10,மின்சார நிலைய வீதி, பெரியகடை யாழ்ப்பாணம் (சி.9757)



# வரலாறு காணாத மலிவு விற்பனை

கொழும்பு ஜெயா புக் சென்ரரின் அனுசரணையுடன் யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தினால் பல்கலைக்கழகத்தில் இரண்டாவது தடவையாக வரலாறு காணாத மலிவு விற்பனை நடைபெறவுள்ளது.

| | |
|---|---|
| காலம் :- | 2004 ஜூலை 19 முதல் 29 வரை |
| நேரம்:- | தினமும் காலை 9.00 மணிமுதல் 6.00 மணிவரை (புதிய நேரம்) |
| இடம்:- | யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரை மண்டபம். |

* சகலருக்கும் இலங்கை நூல்களிற்கு 10% கழிவு வழங்கப்படும்.
* பிறநாட்டு வெளியீடுகளுக்கு 15% கழிவு வழங்கப்படும்.
* மொத்தமாகக் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் இலங்கை வெளியீடுகள் தவிர பிறநாட்டு வெளியீடுகள் (ஒவ்வொன்றிலும் ஆகக்குறைந்தது 10 பிரதிகள்) கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவாக 20% வழங்கப்படும்.


பாடசாலைகள், பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரிகள், கல்வியியற் கல்லூரி, பொது நிறுவனங்கள், பிரதேசசபை, நூலகங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் ஆகிய நிறுவனங்களிற்குக் கடன் அடிப்படையில் புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்குரிய ஒழுங்குகள் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு:-
வணிக மாணவர் மன்றம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(சி-10116)

# ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் - 2004

## வேகப்பந்து வீச்சில் திணறியது பாகிஸ்தான் சிறிலங்காவுக்கு 7 விக்கெட்டால் இலகு வெற்றி



ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது சுற்று லீக் போட்டியில் பாகிஸ்தான் அணியை எதிர்த்து ஆடிய சிறிலங்கா அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

கொழும்பு ஆர். பிரேமதாஸா விளையாட்டு அரங்கில் இரவு பகல் போட்டியாக நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, சிறிலங்கா அணியின் வேகப்பந்து வீச்சாளர்களை எதிர்கொள்ள முடியாது மளமளவென விக்கெட்டுகளைப் பறிகொடுத்தது.

40 ஓவர் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து பாகிஸ்தானால் 122 ஓட்டங்களை மாத்திரமே பெறமுடிந்தது.

துடுப்பாட்டத்தில் அப்துல் ரசாக் மாத்திரம் சிறப்பாக ஆடி 42 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில் வேகப்பந்து வீச்சாளரான சொய்ஸா 29 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், மஹ்ரூப் 2 விக்கெட்டுக்களையும், முரளி, ஜெயசூரியா ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

123 என்ற வெற்றி இலக்கை நோக்கி ஆடிய சிறிலங்கா அணி 32 ஓவர் நிறைவில் 3 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் ஜெயசூரியா 20 ஓட்டங்களையும், குணவர்த்தன 26 ஓட்டங்களையும், அத்தப்பத்து 18 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர். ஆட்டமிழக்காது ஜெயவர்த்தன, சங்கக்கார வெற்றி இலக்கை அடைந்தனர்.

. போட்டியின் ஆட்டநாயகனாக நுவான் சொய்ஸா தெரிவினார்.


இன்று சிறிலங்கா அணி பங்காளதேஷ் அணியை எதிர்த்து ஆடவுள்ளது.

இதில் சிறிலங்கா அணி வெற்றி பெறும் பட்சத்தில் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுவிடும் என்பது குறிப்பிடத்தக்கது.



## பங்களாதேஷை தோற்கடித்தது இந்தியா

பங்களாதேஷ்சுக்கு எதிரான ஆசியக்கோப்பை கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது லீக் போட்டியின் முதல் போட்டியில் இந்திய அணி 8விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.



நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி பங்களாதேஷ் அணியை துடுப்பெடுத்தாடப் பணித்தது. அது சகல விக்கெட்டுக்களையும் இழந்து 177 ஓட்டங்களைப் பெற்றது. பங்களா தேஷ் உதிரிகளாக 37 ஓட்டங்களைப் பெற்றது.



துடுப்பாட்டத்தில் முகமட் அஷ்ரப் புல் மாத்திரம் சிறப்பாக ஆடி 35 ஓட்டங்களைப் பெற்றார்.


பந்து வீச்சில் இர்பான்பதான், சச்சின் டெண்டுல்கர் தலா 3விக்கெட்டுக்ளை கைப்பற்றினர்.

பதிலுக்கு 178 என்ற இலகு வெற்றி இலக்கு நோக்கி துடுப்பெடுத்தாடிய இந்திய அணி இரண்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றிஇலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் சேவாக் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். சச்சின் டெண்டுல்க்கர் ஆட்டமிழக்காது 82 ஓட்டங்களைப் பெற்றார். இதுவே இலகு வெற்றிக்கு வழியாகவும் அமைந்தது. அணித்தலைவர் கங்குலி 60ஓட்டங்களைப் பெற்றார். லக்ஷ்மன் ஆட்டமிழக்காது இருந்தார்.


இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக சச்சின் டெண்டுல்கர் தெரிவானார்.

மேற்படி வெற்றிமூலம் இந் திய அணியின் புள்ளிகள் ஆறாக அதிகரித் துள்ளது. பங்களா தேசுக்கு இதுவரை புள்ளிகள் இல்லை.



## கடந்த சில போட்டிகளை வைத்து ஜெயசூரியாவின் தரத்தை மதிப்பிட முடியாது

அத்தப்பத்து



தனியாக, இந்த தடவை அல்லது கடந்த சில போட்டிகளை வைத்து சனத் ஜெயசூர்யாவின் தரத்தை மதிப்பிட முடியாது என சிறிலங்காவின் அணித்தலைவர் மாவன் அத்தப்பத்து தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் அவர் பெற்றுக் கொடுத்த வெற்றிகள், அவருடைய சகலதுறை ஆட்டம் மிக முக்கியமாக கருதப்படுகின்றது. அதைவிட அவரது அனுபவம் சிறிலங்காவின் அணிக்கு முக்கியமாக தேவைப்படுகின்றது என்றார்.

அதற்காகவே தான் நாங்கள் அவரை மீண்டும் அணியில் சேர்க்கின்றோம் என்றார் அத்தப்பத்து.

தொடர்ச்சியாக பிரகாசிக்கத் தவறிவரும் ஜெய சூரியாவை மீண்டும் அணியில் இணைப்பது ஏன் என செய்தியாளர் கேட்டபோது அத்தப்பத்து மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## சீனா ஒலிம்பிக்குழாமில் 407 வீரர்கள் 20க்கு அதிகமான தங்கம் வெல்வதே குறி

எதென்ஸ் நகரில் எதிர்வரும் 13ஆம் திகதி நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்பதற்காக இதுவரை இல்லாத அளவுக்கு ஆகக் கூடுதலாக 407 வீரர்களை சீனா அறிவித்துள்ளது.

இம்முறை குறைந்தது 20 தங்கப் பதக்கங்களையாவது பெறுவோம் என்று சீனா ஒலிம்பிக் குழு அதிகாரி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

322 வீரர்களுடன் கடந்த சிட்னி ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் சீனா 28 தங்கம், 16 வெள்ளி மற்றும் 15 வெண்கலப் பதங்கங்களைப் பெற்று அமெரிக்கா, ரஷ்யாவுக்கு அடுத்த இடத்தைப் பிடித்தது.

ஆனால், ஆகஸ்ட் மாதம் எதென்சில் நடைபெறவுள்ள இறுதிப் போட்டிக்கு அதிக பட்சமாக 407 பேர் கொண்ட குழு தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இதில் 322 பேர் விளையாட்டு வீரர்கள். இந்த அளவு வீரர்கள் ஒலிம்பிக் போட்டிக்கு தேர்வு செய்யப்படுவது இதுவே முதல் முறை.

இந்த முறை இளைஞர்களுக்கு அதிக வாய்ப்பு தரப்பட்டுள்ளதாக ஒலிம்பிக் கமிட்டி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

முற்றிலும் புதிய வீரர்கள் பங்கேற்பதால் எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் 20க்கும் அதிகமான தங்கப் பதக்கம் வென்றாலே ஆச்சரியம் என்று சீன ஒலிம்பிக் குழுவின் தலைவர் தெரிவித்துள்ளது ஆச்சரியமான விடயமே.




## பொன். விநாயகமூர்த்தி ஞாபகார்த்த கால்பந்து இறுதிப் போட்டி உழவர் ஒன்றிய அணி சம்பியனாகியது

கிளிநொச்சி கால்பந்து லீக் கால் நடத்தப்பட்ட நாட்டுப்பற்றாளர் பொன். விநாயகமூர்த்தி ஞாபகார்த்த கால்பந்துச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் உழவர் ஒன்றிய அணி வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

நேற்று மாலை கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற மேற்படி போட்டியில் உருத்திரபுரம் அணியை எதிர்த்து விளையாடிய உழவர் ஒன்றிய அணி 1-0 என்ற கோல் எண்ணிக்கையில் வெற்றிபெற்றது.

ஆட்டத்தின் முதல் பாதியில் க. கலாதரன் தமது அணிக்கான வெற்றிக் கோலைப் போட்டார்.

ஆட்டத்தின் இரண்டாவது பாதியில் உருத்திரபுர அணிக்குக் கிடைத்த அருமையான தண்ட உதை வாய்ப்பை தவறவிட்டமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டிக்கு மத்தியஸ்தர்களாக சுரேஷ், ஜெயக்குமார், சிவநேசன் ஆகியோர் கடமையாற்றினர்.

போட்டியின் சிறப்பு அதிதியாக கிளி. மாவட்ட அரசாங்க அதிபர் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இச்சுற்றுப் போட்டியின் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுக் கொண்ட அணிகளுக்கு வெற்றிக் கேடயங்களும், சான்றிதழ்களும், பணப் பரிசும் வழங்கப்பட்டன.





## ஒலிம்பிக் போட்டியை கண்டுகளிக்கச் செல்லும் தேசியத் தலைவர்களுடன் பாதுகாப்பு அதிகாரிகளும்


எதென்சில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டி களைக் கண்டுகளிக்கச் செல்லும் தேசியத் தலைவர்களுடன் அவர்களது பாதுகாப்பு அதிகாரிகளும் அனுமதிக்கப்படுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. சர்வதேச பாதுகாப்புச் சட்ட திட்டங்களுக்கு அமைய இந்த அனுமதி வழங்கப்படுவதாக கிரேக்கத்தின் சமூக ஒழுங்கிற்குப் பொறுப்பான அதிகாரி தெரிவித்துள்ளார். தேசியத் தலைவர்களின் பாதுகாப்பு அதிகாரிகள் துப்பாக்கிகளைக் கொண்டு செல்வதற்கு அனுமதிக்கப்படுவர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், போட்டிகளில் கலந்து கொள்ளும் வீரவீராங்கனைகளின் பாதுகாப்பிற்குச் செல்லும் அதிகாரிகள் ஆயுதங்கள் கொண்டு செல்வதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் எனக் கிரேக்க அமைச்சர் கூறியுள்ளார்.

## இந்திய ஹொக்கி அணியின் தலைமை பயிற்றுநர் ராஜீந்தர்சிங் நீக்கம்

இநதிய ஆடவர் ஹொக்கி அணியின் தலைமைப் பயிற்றுனராக இருந்து வந்த ராஜீந்தர் சிங் திடீரென நீக்கப்பட்டுள்ளார். தேர்வுக்குழு உறுப்பினர்கள், பயிற்றுனர்கள் குழுஆகியோரின் ஆலோசனைக்குப் பிறகு இந்திய ஹொக்கி சம்மேளனத் தலைவர் கே.பி.எஸ்.கில் இம் முடிவை மேற்கொண்டுள்ளார். ராஜீந்தருக்குப் பதிலாக ஜேர்மனியைச் சேர்ந்த ஜெரார்டுராச் தலைமைப் பயிற்றுநராகப் பணியாற்றுவார் என இந்திய ஹொக்கி சம்மேளனம் தெரிவித்துள்ளது. ஜெரார்டு இதுவரை உதவிப் பயிற்றுநராக இருந்து வந்தார். ஆலிவர் குர்ட்ஸ் மற்றும் ஜக்பீர்சிங் ஆகியோர் உதவிப் பயிற்றுநர்களாக தொடர்வர் என வட்டாரங்களை மேற்கோள் காட்டி பி.டி.ஐ. செய்தி வெளியிட்டுள்ளது. ஒலிம்பிக் போட்டிக்கான இந்திய அணி தற்போது ஜேர்மனியில் பயிற்சி மேற்கொண்டு வருகிறது. ஒலிம்பிக் போட்டி தொடங்க இன்னும் 3 வார காலமே உள்ள நிலையில் இம் முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்



## சிந்தனைக்கு

மூன்றாம் உலகில், ஒடுக்கப்படும் இனங்களுக்கும் அடக்கப்படும் மக்களுக்கும் எமது புரட்சிகர ஆயுதப் போராட்டம் ஒரு முன்னுதாரணமாக-வழிகாட்டியாக அமைந்திருக்கின்றது.

தமிழீழதேசியத்தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 22- 07-2004

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல்
Daily@ eezhanatham. com
natham 23ela@yahoo. com

## சமாதானத்தைச் சாகடிக்க...........!

விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு முன்பாகக் கருத்துக் கணிப்பொன்றை நடத்துவது பற்றியதான தகவல்கள் மேல் எழத் தொடங்கியுள்ளன. அதாவது இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடத்துவதா? வேண்டாமா? என்பது குறித்தே இக்கருத்துக் கணிப்பு நடாத்துவது பற்றி அரசாங்கத் தரப்பில் பரிசீலிக்கப்படுவதாக இராஜ தந்திர வட்டாரத்தில் பேசப்படுகின்றது.

ஜே.வி.பி முன்வைத்துள்ள இத்திட்டத்திற்கு சனாதிபதி சந்திரிகாவும் தலையசைத்துள்ளதாகக் கருத்துக்கள் பரிமாறப்படுகின்றன.இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பான விவகாரத்திற்கு எத்தகைய முட்டுக்கட்டைகளை போடலாம் என்ற ஜே.வி.பி. யின் ஆராய்ச்சிக்கு இறுதியில் கிடைத்துள்ள வழிமுறை இதுவெனக் கொள்ளலாம்.

சிறிலங்கா ஆட்சியாளர்கள் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக இதுவரையில் கருத்துக்கணிப்புக்கள் எதையும் நடத்தாது விடினும் ஒவ்வொரு தேர்தலையும் அவர்கள் இனப்பிரச்சினைகள் குறித்த கருத்துக்கணிப்பாகவே கொண்டிருந்தனர். ஒரு சமயத்தில் யுத்தத்திற்கு ஆதரவளிக்குமாறு மக்களிடம் கோரி அங்கீகாரம் பெற்றனர்.அதில் வெற்றிபெற முடியாது போனபோது சமாதானத்திற்கெனக் கோரி அங்கீகாரம் பெற்றனர்.

சமாதானத்தை நிலை நிறுத்துவோம். சிங்கள மக்களினது கண்ணீரைத் துடைப்போம் என வாக்கு வேட்டையில் இறங்கிய சந்திரிகா குமாரதுங்க தேர்தலில் வெற்றி பெற்று சனாதிபதியாக வந்தார். ஆயினும் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை அவர் நிறைவேற்றவில்லை. யுத்தத்தையே தொடர்ந்தார். சமாதானத்திற்கென மக்கள் வழங்கிய ஆணையை அவர் நிறைவேற்றவில்லை.

ஆனால் அதன் பின்னர் மீண்டும் சமாதானத்தை உருவாக்குவதற்கு ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணிக்கு மக்கள் ஆணையை வழங்கினர்.இதன் நிமித்தம் உருவாக்கப்பட்ட சமாதான சூழ் நிலையே இன்று நிலவுகின்றது. இந் நிலையில் தற்பொழுது இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்து கருத்துக் கணிப்பொன்றை நடாத்த விளைவதானது நாட்டில் நிலவும் சமாதானச் சூழ் நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்க சந்திரிகா அரசாங்கம் முற்படுவதாகவே கொள்ளத்தக்கதாகும். அரசு தீர்மானமொன்றை மேற்கொள்வதற்காக கருத்துக் கணிப்பை யாரிடம் நடத்துவது என்பது நடை முறையிலுள்ளதொரு வழக்குத்தான்.

ஆனால் எதற்குக் கருத்துக் கணிப்பு நடத்துகிறோம் என்பதை பொறுத்து அது யாரிடம் நடத்தப்படுதல் என்பது முக்கியமானது சர்வதேச விவகாரம் ஒன்றில் ஒரு நாடு பொதுத்தீர்மானம் ஒன்றிற்கு வரவேண்டுமானால் அக் கருத்துக் கணிப்புக்கள் நாடுதழுவிய ரீதியில் நடாத்தப்படுவதுண்டு. எடுத்துக்காட்டாக ஐரோப்பிய யூனியனில் இணைதல், யூரோவை பொது நாணயமாகக் ஏற்றுக்கொள்ளுதல் போன்ற விடயங்களில் ஐரோப்பாவில் பல நாடுகள் கருத்துக் கணிப்புக்கள் நடத்தின. இதன் முடிவுகள் சாதகமாகவும் அமைந்தன, பாதகமாகவும் அமைந்தன. இதேவேளை இக் கருத்துக் கணிப்புக்கள் ஒன்றிற்கு மேற்பட்ட தடவைகள் நடாத்தப்பட்டதும் உண்டு.

இதேவேளை உள்நாட்டில் சர்ச்சை ஒன்றின் தீர்விற்காக நடாத்தப்படும் கருத்துக் கணிப்புக்கள் அச் சர்ச்சைக்குரிய மக்கள் மத்தியிலே நடாத்தப்படுவது உண்டு எடுத்துக்காட்டாக கியூபெக் மாகாணம் கனடாவில் இருந்து பிரிந்து செல்வதற்கான கருத்துக் கணிப்புக்கள் கியூபெக் மாகாணத்தில் நடத்தப்பட்டதே ஒழிய கனடா பூராவிற்குமானதாக நடத்தப்படவில்லை. அதாவது பிரிந்து செல்ல விளைந்த இனத்தினர் மத்தியில் நடாத்தப்பட்டதே ஒழிய, பெரும்பான்மையினர் மத்தியில் நடாத்தப்படவில்லை.

ஆகையினால் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பாகக் கருத்துக் கணிப்பானது நடத்தப்படவேண்டுமெனில் அது தமிழர் தாயகப் பகுதியிலேயே நடத்தப்படுதல் வேண்டும்.ஆனால் கடந்த பொதுத் தேர்தலில் இதற்கான ஏகோபித்த ஆதரவை தமிழ் மக்கள் வழங்கியுள்ளனர். விடுதலைப்புலிகளைத் தமது ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டுள்ள தமிழ் மக்கள் அவர்களின் தலைமையிலான இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக் கோரிக்கைக்கு தமது பூரண ஆதரவை வழங்கியுள்ளனர்.

இந் நிலையில கருத்துக் கணிப்பு என்ற ரீதியில் சிங்களவர்கள் மத்தியில் கருத்துக் கணிப்பொன்றை நடாத்த அரசாங்கம் தீர்மானிப்பதானது சமாதானத்தைப் பலியிடுவதற்கெனநடத்தப்படும் வேள்வியாகவே இருக்கும். அதுவுமல்லாது சிங்கள அரசியல் வாதிகள் தாராளமனம் படைத்த சனநாயகவாதிகளும் அல்ல. அனைவரும் பேரினவாதிகளே. இந் நிலையில் ஏற்கனவே இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை குறித்து பெரும் பீதியொன்றைச் சிங்களவர்கள் மத்தியில் தோற்றுவித்து வரும் ஆளும் தரப்பினர் அது குறித்து கருத்துக் கணிப்பொன்றை நடாத்த விளைவதானது சமாதானப் பேச்சு வார்த்தைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் செயலாகவே இருக்கும்.

# சிறிலங்காவில் அமெ.,பாக்.இன் தலையீடு குறித்து இந்தியா கவலை

### - சிங்கள நாளிதழ் தெரிவிப்பு

சிறிலங்காவில் அதிகரித்துவரும் அமெரிக்க, பாகிஸ்தான் நாடுகளின் தலையீடுகளை ஈடுசெய்யும் வகையில் சிறிலங்கா விவகாரங்களில் இந்தியா மீண்டும் தலையிட முயன்றாலும் இங்குள்ள நிலைமை காரணமாக இப்போது சாதகமான நிலை தோன்றவில்லை என இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளார்.

இதன் முதல் கட்டமாக இந்தியா சென்றிருந்த பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இந்தியாவுடனான பாதுகாப்பு ஒப்பந்தத்துக்கு இறுதி வடிவம் கொடுத்திருக்கிறார். இவ்வொப்பந்தத்தின்படி இந்தியா முதற்கட்டமாக சிறிலங்காவுக்குப் பாரிய அளவில் இராணுவ உதவிகளை வழங்க வழியேற்படும்.

எனினும் முன்னைய பிரதமர் ராஜீவ்காந்தியின் ஒப்பந்தத்தின்படி நேரடியாக இராணுவரீதியாக தலையிடமாட்டாது என இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

முன்னர் 1987இல் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்த காலத்தில் ஆட்சியிலிருந்தவர்களே இப்போதும் இருக்கிறார்கள் குறிப்பாக அப்போது வெளிவிவகார அமைச்சராக இருந்த நட்வந்சிங்கே இப்போதும் வெளிநாட்டமைச்சராகப் பதவி வகிக்கிறார். சிறிலங்காவின் இனப் பிரச்சினை தொடர்பாக இந்தியா முன்னர் கவலை கொண்டிருந்தது ஆயினும் அமெரிக்காவினதும், பாகிஸ்தாவினதும் தலையீடு குறித்தே கவலை கொண்டிருக்கிறது என சிங்கள நாளிதழ் ஒன்று கூறுகிறது.

# பிக்குகளை அரசு பாதுகாக்க தவறின் நாட்டில் பௌத்த மதம் அழிந்துவிடும்

### –அனுதாபக் கூட்டத்தில் அன்ரன்கல தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

பௌத்த பிக்குகளை அரசாங்கம் பாதுகாக்கத் தவறினால் நாட்டில் பௌத்தமதம் அழிந்துவிடும் என அன்ரன்கல தேரர் தெரிவித்தார். ஹிங்குராங் கொட இம்புல் கொல்ல சுகதபால தேரர் சமீபத்தில் கைக்குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி மரணமடைந்தது தொடர்பாக இடம் பெற்ற அனுதாபக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.அவர் மேலும் தெரிவிக்கையில்; இந்த நாட்டில் பௌத்த பிக்குகளுக்கு பாதுகாப்பு இன்மையால் அவர்கள் கொலை செய்யப்பட்டும், அடிதடிகளுக்கு இலக்காகியும் வருகின்றனர். அவர்களை அரசாங்கம்பாதுகாக்க வேண்டும் என்றார்.

# எமது வரவுசெலவுத்திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு சம்பளஉயர்வு

### –சிறிலங்கா நிதி அமைச்சர் சரத் அமுனுகம

எமது அரசாங்கத்தின் முதலாவது வரவு செலவுத்திட்டத்தின் மூலம் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கபடுமென நிதியமைச்சர் சரத் அமுனுகம நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

திஸ்ஸதெவேந்திர ஆணைக் குழு இதற்கு தேவையான நடவடிக்கைகளை மெற்கொண்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்; பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தி உரிய மக்களுக்கு கைகொடுக்கும் புதியபொருளாதார கொள்கையை அரசாங்கம் முன்னெடுத்து வருகிறதென தெரிவித்துள்ளார். பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்ட வேளை விவாதத்தின் போது முன்வைக்கப்பட்ட யோசனைகள் குறித்து கருத்துத் தெரிவிகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய பாதுகாப்பைக் கேள்விக்குறியாக்கி வெளிநாட்டுக் கடனுதவிபெற முயலக் கூடாது

### –ஹெலஉறுமய பா.உ.ரத்தனதேரர் வலியுறுத்து

இலங்கையின் தேசியப் பாதுகாப்பை கேள்விக்குட்படுத்திக் கடனைப் பெற்றுக்கொள்ளக் கூடாதென ஹெலஉறுமய பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியரத்தனதேரர் தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய வேளை இதனைத் தெரிவித்துள்ளார். சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்பட்டாலேயே வெளிநாட்டுக் கடனுதவிகள் கிடைக்கும் என சர்வதேச நாடுகள் வலியுறுத்தி வருகின்றமை தெரிந்ததே.

# வவுனியாவில் தேங்கியிருந்த தபால் பொதிகளை விநியோக்க நடவடிக்கை

(செட்டிகுளம் நிருபர்)

வவுனியா தபால் நிலையத்தில் நீண்ட நாட்களாகத் தேங்கி இருந்த பொருட்கள் அடங்கிய தபால் பொதிகளின் ஒரு தொகுதி நேற்று வவுனியாவில் இருந்து பாரஊர்தி மூலம் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. நீண்ட நாட்களாகத் தேங்கி இருந்த தபால் பொதிகள தொடர்பாக வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் பாராளுமன்றத்தில் வைத்து தபால் அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். இதனை அடுத்து நேற்று வவுனியாவில் இருந்து 840 பொருட்கள் அடங்கிய தபால் பொதிகள் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. வவுனியா தபால நிலையத்தில் நீண்ட நாட்களாக வன்னி, யாழ்ப்பாணத்துக்குரிய 2663 பொருட்கள் அடங்கிய தபால் பொதிகள் இருந்துள்ளன. இதில் யாழ்ப்பாணத்துக்குரிய பொதிகள் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டு விமானம் மூலம் யாழ்ப்பாணம் கொண்டு செல்லப்படும். அதே சமயம் வன்னிக்குரிய பொதிகளை அந்த விலாசத்தில் உள்ளவர்களுக்கு அறிவிக்கப்படவுள்ளது. உரியவர்கள வவுனியா தபால் நிலையத்தில் வந்து பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது. (21)

## விசா வழங்கும் செயலகம் திறப்பு

(கொழும்பு)

கொழும்பில் பிரிட்டனுக்கு விசா வழங்கும் செயலகம் ஒன்று நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் விசா வழங்கும் நடவடிக்கையை மேம்படுத்த உள்ளதாக இந்தச் செயலகத்தை திறந்து வைத்து உரையாற்றிய இலங்கைக்கான பிரித்தானிய உயர் ஸ்தானிகர் ஸ்ரீவர் பவல் தெரிவித்துள்ளார்.

இந்த அலுவலகத்தினூடாக பிரிட்டனுக்கான விசா விண்ணப்பத்தை இலங்கையர்கள் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஆலயத்திற்கு அனுப்ப முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# எந்தப் பாராளுமன்றத் தெரிவுக் குழுவிலும் எதிர்க் கட்சிக்கு பெரும்பான்மை வழங்கப்படாது

### - அமைச்சர் ஜெயராஜ்பெர்னாண்டோபுள்ளே

பாராளுமன்றத்தின் எந்தவோர் தெரிவுக்குழுவிலும் எதிர்க்கட்சிக்குப் பெரும்பான்மையை அரசாங்கம வழங்கமாட்டாதென அமைச்சர் ஜெயராஜ் பெனர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.நேற்று பாராளுமன்றத்தில் இதனைத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஐ.தே. கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப்மைக்கல் பெரேரா சமாநாயகரிடம் எழுப்பிய கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கையில் அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார். பாராளுமன்றத்தில் ஆளும கட்சி சிறுபான்மைக் கட்சியாக இருப்பது தெரிந்ததே.

# யாழ்.இல் இடம்பெறும் எழுச்சி நிகழ்வுகளில் மாணவர்கள் பங்குகொள்வதை நிறுத்துக

## மனித உரிமை ஆணைக்குழுவுக்கு படைத்தளபதி முறையீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் இடம் பெற்று வரும் எழுச்சி நிகழ்வுகளில் பாடசாலை மாணவர்கள் பங்கு பற்றுவது உடனடியாகத் தடுத்து நிறுத்தப்படல் வேண்டுமெனக் கோரி சிறிலங்கா அரசின் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

யாழ். குடாநாட்டில் இடம் பெற்றுவரும் தமிழீழ எழுச்சி நிகழ்வுகளில் அநேகமான பாடசாலை மாணவர்கள் பங்குகொள்வதாகவும், இவற்றில் பங்குகொள்ள வேண்டாம் எனப் படையினர் பல தடவை அறிவுறுத்தியும் அதைப் பொருட்படுத்தாது மாணவர்கள் எழுச்சி நிகழ்வுகளில் பெருமளவில் கலந்து கொள்வது படையினரது மனநிலையைப் பெரிதும் பாதிப்பதாகவும் குறிப்பிட்டே இராணுவத் தளபதி இம்முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

இதற்கு அண்மையில் இடம் பெற்ற கரும்புலிகள் தின நிகழ்வுகளில் அதிகளவு மாணவர்கள் பங்குபற்றியுள்ளனர் என்பதை மேற்கோள்காட்டி தனது குற்றச்சாட்டை படைத் தளபதி கடிதம் மூலமாக முன்வைத்துள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அதிகாரி தெரிவித்துள்ளார்.(33)

# ஜயந்ததனபால-புலித்தேவன் கொழும்பில் சந்தித்துப் பேச்சு

சிறிலங்கா அரசாங்கத்தின் சமாதானச் செயலகப் பொறுப்பாளர் ஜெயந்த தனபாலவும், விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவனும் நேற்று முன்தினம் கொழும்பில் சந்தித்து, பேசியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது ஒரு பரஸ்பர சந்திப்பு மட்டுமே என்று ஜெயந்த தனபால தெரிவித்துள்ளார்.வருகின்ற வார இறுதியில் கொழும்பிற்கு வருகைதரவுள்ள நோர்வே தரப்பினர், கிளிநொச்சி சென்று முக்கிய பேச்சுக்களை நடாத்தவுள்ளதுடன், அடுத்தகட்டப் பேச்சுக்களை ஆரம்பிப்பது குறித்து முக்கிய விபரங்களை வெளியிடவுள்ளார்கள் என்று ஊடகங்கள் தெரிவித்துள்ள நிலையில், தனபால-புலித்தேவன் சந்திப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என இணயத்தளச் செய்திகள் தெரி விக்கின்றன:

# கண்காணிப்புக் குழுத்தலைவருடன் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகள் சந்திப்பு

இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவின் மாவட்ட பிரதிநிதிகளுக்கும், கண்காணிப்புக் குழுவின் தலைவருக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றுள்ளது.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைமையகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின் போது, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் செயற்படும் மாவட்டங்களில் போர் நிறுத்த உடன்படிக்கையை மேலும் பலப்படுத்தி, யுத்த நிறுத்த மீறல்களைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் குறித்து ஆராயப்பட்டுள்ளது.

கண்காணிப்புக் குழுதலைவர் ரொன்ட் புறு ஹொவ்டே, பிரதித் தல்லவர் ஹக்ரப் ஹொக்லண்ட் மற்றும் வடக்கு, கிழக்கில் யாழ்ப்பாணம், வவுனியா, வன்னி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்கள் அனைத்திலும் பணியாற்றும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகளும் இச்சந்திப்பில் கலந்து கொண்டுள்ளனர்.

இதேவேளை வடக்கு, கிழக்கில் நிலைமைகளால் போர் நிறுத்த உடன்படிக்கையை அமுல்படுத்துவதில் கண்காணிப்புக் குழுவினர் பெரும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வருவதாகவும், இதனால், அவர்கள் தங்கள் பணிகள் குறித்து மீள்பரிசீலனை செய்யும் நிலையில் இருப்பதாகவும் வெளியாகியுள்ள செய்திகளை கண்காணிப்புக் குழுவின் குரல்தரவல்ல அதிகாரி லீசா பொன்னஃபேர்க் மறுத்துள்ளார்.

## மெய்வல்லுநர் போட்டி

(வவுனியா செய்தியாளர்)

வடக்கு கிழக்கு மாகாண பாடசாலை மாணவர்கள் பங்குபற்றும் மாகாண மட்ட மெய்வல்லுநர் போட்டிகள் திருகோணமலையில் நடைபெறவுள்ளன.

திருகோணமலை மக்கெய்சர் விளையாட்டரங்கில் எதிர்வரும் 24 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரை இப்போட்டிகள் நடைபெறவுள்ளன. இப்போட்டிகளில் பங்குபற்றும் போட்டியாளர்களை உரிய நேரத்திற்கு சமுகமளிக்குமாறு மாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.அருணகிரிராஜா அவர்கள் கேட்டுள்ளார். (10)

# சட்டமூலம் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

கட்டாயமாகமதம்மாற்றுவதைத் தடை செய்யும் சட்டமூலம் நேற்றுப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஹெலஉறுமயப் பாராளுமன்ற உறுப்பினர் ஓமல்லேசோபிததேரரால் தனிப்பட்ட சட்டமூலமாக இது சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நீர்ப்பாசன வாய்க்காலுக்குள் வாகனம் தடம்புரண்டது

**வாகனச் சாரதி படுகாயம்**

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கோவிந்தன் கடைச் சந்திக்கு அருகாமையில் உள்ள பிரதான நீர்ப்பாசன வாய்க்காலுக்குள் கன்ரர் வாகனம் நேற்று இரவு தடம்புரண்டுள்ளது.

இரவு 7.30 மணியளவில் வட்டக்கச்சிப் பகுதியில் இருந்து வந்த கன்ரர் சந்தியில் வேகமாக திருப்பமுற்பட்டவேளை சாரதியின் கட்டுப்பாட்டை மீறி வாய்க்காலுக்குள் தடம்புரண்டுள்ளது. இதன்போது வாகனச் சாரதியான துரைச்சாமி சுந்தரப்பிள்ளை (வயது - 45) படுகாயமடைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை தமிழீழ காவல்துறையின் வீதிப் போக்குவரத்துத் துறையினர் மேற்கொண்டு வருகின்றனர். (கு)

## விபத்தில் மாணவி படுகாயம்

கண்டி வீதியில் உள்ள சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு அண்மையாக நேற்று இடம்பெற்ற மினிபஸ்-துவிச்சக்கர வண்டிவிபத்தில் மீசாலையைச் சேர்ந்த எஸ்.தர்சிகா (வயது 17) என்ற மாணவி படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் பாடசாலை முடிந்து துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த மாணவியை ஏ-9 வீதிவழியாக யாழ்.நோக்கி வந்து கொண்டிருந்த மினிபஸ்மோதியதில் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. (33)

# கந்தப்பொல துப்பாக்கிச்சூடு சாதாரண சம்பவமெனத் தீர்ப்பு

நுவரெலிய கந்தப்பொல பகுதியில் கடந்த ஏப்ரல் 28 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கி சூட்டுச் சம்பவம் சாதாரணமான நடவடிக்கையாகும் என நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. நோனாத் தோட்டம் மற்றும் பாக் தோட்டம் ஆகிய இடங்களை சேர்ந்த இரண்டு தமிழர்கள் இந்த சம்பவத்தில் கொல்லப்பட்டனர். சம்பவம் தொடர்பில் 12 காவல் துறையினருக்கும்,5 இராணுவத்தினருக்கும் எதிராக நுவரெலிய நீதிவான் நீதிமன்றத்தில் 5 தவணைகளாக வழக்கு விசாரணை நடைபெற்று வந்தது. இந்தநிலையில் நேற்று வழக்கு தொடர்பில் நீதிவான் சமன் அபேகோன் தமது தீர்ப்பை வழங்கினார். கட்டுப்படுத்த முடியாத கூட்டத்தினரை கட்டுப்படுத்துவதற்காகவே துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சாட்சியங்களில் இருந்து தெரியவந்துள்ளதாக தமது தீர்ப்பின் போது தெரிவித்த அவர், எனவே குறிப்பிட்ட துப்பாக்கி சூட்டு சம்பவம் சாதாரணமான நிகழ்வே என தீர்ப்பளித்தார். (32)

# பிரதம நீதியரசர் விவகாரத்தில் பாராளுமன்றத் தெரிவுக்குழுதேவை

**எதிர்க்கட்சிகள் கோரிக்கை**

(கொழும்பு)

பிரதம நீதியரசர் சரத் என் சில்வா பெண் ஒருவருடன் வாகனம் ஒன்றில் இருந்ததாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் பாராளுமன்ற தெரிவுக்குழு நியமிக்கப்பட வேண்டும் என கோரப்பட்டுள்ளது. எதிர்க்கட்சிகளின் கூட்டணி இந்த கோரிக்கையை நேற்று பாராளுமன்ற செயலரிடம் எழுத்து மூலம் கையளித்துள்ளது. இந்த தெரிவுக்குழுவுக்கென 12 பேரின் பெயரையும் எதிர்க்கட்சி கூட்டணி பரிந்துரைத்துள்ளது. பொதுமக்கள் இந்த விடயத்தில் நீதியமைப்பின் மீது நம்பிக்கையற்றிருப்பதாகவும் எனவே இந்த விடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படல் அவசியம் எனவும் எதிர்க்கட்சி கூட்டணி தெரிவித்துள்ளது. (32)

# மாவிட்டபுரம் உற்சவத்திற்கு படையினர் கட்டுப்பாடு விதிப்பு

யாழ். மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்திருவிழாவிற்குச் செல்லும் அடியார்களுக்குப் படையினர் நேரக்கட்டுப்பாடு விதித்துள்ளனர்.

வலிகாமம் வடக்கிலுள்ள இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத்திலுள் மேற்படி ஆலயம் அமைந்திருப்பதைக் காரணம் காட்டியே சிறிலங்காப் படையினர் இந்நேரக்கட்டுப்பாட்டை விதித்துள்ளனர்.

இதனடிப்படையில் ஆலயத்திருவிழாவிற்கு காலை 8மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரையுமே அடியார்கள் ஆலயத்திற்குச் செல்லமுடியும் எனவும் மேற்குறிப்பிட்ட கால எல்லையினுள் ஆலய நிகழ்வுகள் யாவையும் நிறைவு செய்து ஆலயத்திலிருந்து வெளியேறிவிடவேண்டும் எனவும், மீறுவோர் கைது செய்யப்படுவர் எனவும் படையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

இதனால் பக்தர்கள் இயல்பான முறையில் வழிபாடாற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (33)

## தமிழ்த்...

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்: இன்றைய அமைதிச் சூழலை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் சில தீய சக்திகள் எமது தாயகப் பிரதேசங்களுக்குள் ஊடுருவி அமைதியைச் சீர்குலைத்து எமது மக்களுக்குள் குழப்பத்தை ஏற்படுத்த முயல்கின்றனர்.

ஆனால் இந்த தீய சக்திகளை எதிர்கொள்ளக் கூடிய வகையில் விடுதலைப்புலிகள் உள்ளனர். இதேவேளை கடந்த இரண்டரை ஆண்டு கால அமைதிச் சூழலைப் பயன்படுத்தி சிறிலங்கா அரசும் அதனுடன் இணைந்திருக்கும் தமிழ்த் தேச விரோத சக்திகளும் அமைதியைக் குழப்பி மக்களிடையே பிளவுகளை உண்டு பண்ணும் வகையிலேயே செயற்படுகின்றனர். அரசின் இந்தப் போக்குப் பற்றித் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் நன்கு தெரியும் அதேவேளை அரசின் எந்த நடவடிக்கைகளையும் எதிர்கொள்ளும் திறனுடனேயே விடுதலைப்புலிகளும் உள்ளனர். அத்துடன் மக்கள் பலமும் எமக்கு உண்டு.எனவே எமது மக்கள் இந்தத் தீயசக்திகளின் வதந்திகளை நம்பாது எமது போராட்டத்திற்குத் தொடர்ந்தும் பக்க பலமாக நின்று இந்த சக்திகளையெல்லாம் எதிர்கொண்டு விடுதலையை விரைவில் வென்றெடுக்க சங்கற்பம் எடுப்போமெனத் தெரிவித்தார்.

## முதல்வர்...

முதல்வருடனும் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். எனினும் எந்தவிதமான முடிவுகளுக்கும் வரவில்லை. மாலை வரை மாணவர்களால் வளாக முதல்வரும் ஊழியர்களும் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர். எனினும் மாலை 5.00 மணியளவில் வவுனியாப் பிரதேச செயலாளர் திருமதி ஷால்ஸ் மற்றும் அதிகாரிகள் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். இதன் போது சில முடிவுகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருந்த சமயம் விரிவுரையாளர்கள் சிலரின் உதவியுடன் கல்வி சாரா ஊழியர்கள் வெளியில் கொண்டுவரப்பட்டனர். இதன் பின்னர் எதிர்வரும் திங்கட்கிழமை பூங்கா வீதிக் கட்டடத்தில் 2 ஆம் மாடி மாணவர்களுக்கு ஒப்படைக்கப்படும் என்று முடிவு காணப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க இந்தப் பிரச்சின[illegible]க்கும் கல்வி சாரா ஊழியர்களுக்கும் எந்த விதமான தொடர்பும் இ[illegible]லாத போதிலும் அவர்களை 7 மணி நேரம் தடுத்துவைத்தமையால் [illegible]மது பாதுகாப்புக்கு பங்கம் ஏற்பட்டு இருப்பதாகவும் தமது பாதுகாப்பு உறுதிசெய்யப்படும் போதுதான் தாம் வேலைக்குத் திரும்ப முடியும் என்றும் கல்வி சாரா ஊழியர்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன் தாம் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தொடர்பாக பொலிசார் நீதிமன்றம் போன்றவற்றுக்கு முறையிட்ட போதிலும் எவரும் தமக்கு உதவி செய்யவில்லை என்றும் தெரிவித்தனர். இது தொடர்பாக இன்று மனித உரிமைகள் அலுவலகத்தில் மனுத்தாக்கல் செய்யவுள்ளதாகவும் தெரியவருகிறது. (21)

## கும்பகோணம்...

எதிராகவும் ஓங்கி ஒலிக்கின்ற எமது அமைப்பு எந்தப் பாவமும் செய்யாத பிஞ்சுக் குழந்தைகளைப் பிரிந்த நெஞ்சை உருக்கும் அவலக்குரல் அயல்வீட்டில் கேட்ட போது தாங்கமுடியாத துயரமடைந்தது. தமிழீழத்தின் ஒவ்வொரு மாணவனும் கண்ணீர் சிந்தினான். ஓடிவந்து அபயக்கரம் நீட்ட முடியாத துன்பச்சூழலை எண்ணி ஓங்கி நெஞ்சிலறைந்து துடிக்கிறோம். ஆறுதல் அடைய முடியாத இந்த அவலத்தில் துயர்பகிர்கின்றோம். பல்லாண்டுகாலமாக ஒடுக்குமுறைபடுகொலை என்று வேதனைகளைச் சுமந்து வாழ்ந்து கொண்டே செத்துக்கொண்டிருந்த எமது மாணவசமூகத்தின் கறைபடிந்த இறந்த காலத்தில் பல்வேறு இனப் படுகொலைகள் சிறிலங்கா அரசின் முப்படைகளாலும் எமது தாயக மண்ணில் வாழும் அப்பாவிப் பொது மக்கள் மீதும் குறிப்பாகப் பல் கலைக்கழகப் பாடசாலை மாணவர்கள் மீதும் நடந்தபோதெல்லாம், உறவுகளின் இழப்பால் இடிந்து போன எம் இதயங்கள் கடந்த வெள்ளிக்கிழமை கும்பகோணத்தில் நடைபெற்ற தீவிபத்தினால் அதிர்ந்து போனது.

கனவுகளோடு குழந்தைகளைப் பெற்று, வளர்த்து அவர்களின் வாழ்வே தமது மகிழ்வாக உயிர் பிடிக்கும் பிராண வாயுவாக எண்ணும் பெற்றோர்களும் உடன் பிறந்து உயிர்கலந்த உறவுகளும், நாளும் நமக்கினிய நட்புகளும் ஏன் பாரத நாடே கதறி அழுகின்ற போது முன்னைய தொடர்பால் பூகோள இருப்பால், பேசுகின்ற மொழியால் மிக நெருக்கமான உங்கள் உறவுகள் நாங்கள் எப்படி இந்த அழுகுரலிற்கு இரங்காமல் இருப்பது, மனமுருகி மழலைகளின் ஆத்ம சாந்திக்காக அன்பு மலர் தூவுகின்றோம். மரணங்கள் மலிந்த எம் மண்ணில், மானிடம் மரித்துப்போகாத மாபெரும் மாணவ சக்தியின் குரலான நாம் மரணித்த மழலைகளுக்கு அகவணக்கம் செலுத்தி அமைகிறோம் எனக் கோரப்பட்டுள்ளது. (36)

## ஊடகவியலாளர்....

ஏற்படுத்தியதாக சுயாதீன ஊடகவியலாளர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது. எனினும் அதனைக் காவலதுறை மறுத்துள்ளது. (32)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு யூலை மாதம் 22ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.